# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
#11, தனலட்சுமி ஹவுஸ்,
2 வது மாடி, 2 வது குறுக்குத் தெரு,
திருமால் நகர், பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056.

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.
**Tele :** 954630 - 256157

## ஊழியர்கள், ஊழியங்கள் தவறுகளை வெளிப்படையாக விமர்சிப்பது தவறா அல்லது சரியா?

1. நான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமானவர்களே, நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியத்தின் நிமித்தம், சத்தியத்தை அறிந்திருக்கிற, சத்தியத்தின்படி நேசிக்கிற, தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவர்களாகிய உங்களுக்கு சுவிசேஷகனாகிய நான் எழுதுகிறதாவது:
பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடும் கூட உங்களோடிருப்பதாக. எனக்குப் பிரியமானவர்களே, தயவுசெய்து இனி என்னுடன் கடிதத் தொடர்புக்கு மேலே இடதுபுறத்தில் உள்ள சென்னை விலாசத்தைப் பயன்படுத்துங்கள். இனி நான் அதிகமான நாட்கள் சென்னையிலும், மிக்குறுகிய நாட்கள் மட்டுமே திருவைகுண்டத்தில் இருப்பேன். இது எனது குடும்ப நலனுக்காக செய்த ஒரு மாற்றம்.

2. பிரியமானவர்களே, லவோதிக்கேயா சபைக்காலமாகிய நாம் வாழும் இந்தக் கடைசி சபைக்காலத்தில், இக்காலத்துக்குரிய செய்தியில் காணப்படும் கள்ள கபடமுள்ள வேலையாட்கள் மற்றும் அவிசுவாசிகள், பாவணை விசுவாசிகள் எனக்கு விரோதமாய் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செய்து வருகிற கிரியைகளை நான் அடிக்கடி நினைத்துக்கொள்வேன். சில பாஸ்டர்கள் நான் அவர்கள் சபைக்கு வந்து இக்காலத்துக்குரிய செய்திகளைக் கொடுத்து சபையை பக்திவிருத்தியடையச்செய்ய உதவிட கேட்டுக்கொள்வார்கள். ஆனால் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தின வுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தெரிந்துகொள்ள விரும்பும் சபை மக்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பார்கள். ஆதலால் அந்த சபைக்கு நான் செல்லமுடிவதில்லை. பாஸ்டர்கள் ஆவிக்குரிய காரியங்களில் சுயாதீனமாக முடிவெடுக்க முடியவில்லை. நல்லதோ, கெட்டதோ அவரும் விசுவாசிகளை திருப்திப்படுத்திக்கொண்டு தான் ஊழியம் செய்யவேண்டியிருக்கிறது. அவர் பாஸ்டர் என்பதால் அவருக்கு முன் இருக்க எப்படியும் பத்து பேர்கள் தேவைப்படுகிறார்கள். அவர் அதைத்தான் மனதில் கொண்டு செயல்பட வேண்டியதிருக்கிறது. ஆதலால் பாஸ்டர்கள் நிலையும் பரிதாபமாகத்தான் இருக்கிறது. மேலும் சில சபைகளில் விசுவாசிகள், மூப்பர்கள் நான் வந்து சபை பக்திவிருத்தியடைவதற்கான செய்திகளை சபையில் வந்து கொடுக்க வேண்டும் என விரும்புவார்கள். ஆனால் சபையில் முதன்மையாயிருக்க விரும்புகிற பாஸ்டர் என்னை ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால் அவர் சத்தியத்திற்கு என்னுடன் உடன்வேலையாள் அல்ல. ஆதலால் அவர் என்னை சேர்த்துக்கொள்ள விரும்பவதில்லை. இவ்வாறாக என் ஊழியத்தின் பாதையில் என்னை ஏற்றுக்கொள்பவர்கள் மிக மிக சொற்பமானவர்களும் என்னை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் அநேகரும் உண்டு. ஆனால் அது என்னை எந்தவகையிலும் பாதிப்பதில்லை.

3. என்னை சபையில் ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள், என் மீது குற்றஞ்சாட்டுபவர்கள்/ எனக்கு விரோதமாக சொல்லுகிற காரியங்களாவது:
அ) நான் சபை பாஸ்டர் மீது குற்றஞ்சுமத்துகிறவன்.
ஆ) விசுவாசிகளை கடிந்து கண்டனம் பண்ணுகிறவன்.
இ) சபைகளை உடைக்கிறவன்.
ஈ) சபை பாஸ்டர், விசுவாசிகளை பெயர் சொல்லி குற்றம் சாட்டுகிறவன்.
பொதுவாக நான் ஒரு சபைக்கு சிலகாலம் சென்று வந்தால் அந்த சபை கூடிய சீக்கிரத்தில் உடைந்து விடும், அதாவது சபையில் பிரிவினை வந்துவிடும் என்பதாகும்.

4. ஆனால் என்னை நேசிக்கிறவர்கள், சகோதரரே, சபை கூடுதல் எதற்கு? அங்கு தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியைக் கேட்டு, தவறுகள், குற்றங்கள், குறைகள் கண்டிக்கப்படும் போது, அதை ஏற்றுக்கொண்டு, ஒருவன் தன்னை சீர்தூக்கிப் பார்த்து, தவறுகளை திருத்திக் கொள்வதற்காகத் தானே. ஆக சபை பக்திவிருத்திக்கானவைகளைத் தானே நீங்கள் போதிக்கிறீர்கள், ஆதலால் உங்கள் ஊழியம் எங்களுக்குத் தேவை என்பார்கள்.

5. இப்படியாக என் ஊழியத்தின் பாதையில் விருப்பு, வெறுப்புக்களை சந்தித்து வந்தாலும், அவைகளால் சோர்ந்து போகாதபடி உற்சாகமாக கர்த்தர் எனக்குக் கொடுக்கிற பணிகளை நிறைவேற்றுவதில் தீவிரமாகவே இருந்துவருகிறேன். கர்த்தரும் என்னை வழிநடத்துகிறார், தாங்கி வருகிறார், பாதுகாத்து வருகிறார். துதி கனம் மகிமை என்றென்றைக்கும் அவருடைய பரிசுத்த நாமத்திற்கு உண்டாவதாக. நானோ ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுயஇச்சைகளுக்கேற்ற போதகர்களை தங்களுக்குத் திரளாய் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் இது என்பதை நன்றாக அறிந்தவனாக; சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணி, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணியும், கடிந்து கொண்டும் சபைக்கு புத்தி சொல்லி வருகிறேன். அவ்வப்போது பற்பல தலைப்புகளினால் இக்காலத்துக்குரிய செய்தியைத் தொகுத்து சபைக்கு எழுதிவருகிறேன். என் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கி கர்த்தர் என்னிடத்தில் ஒப்புவித்த பணியை உண்மையும், உத்தமுமாகச் செய்துவருகிறேன்.

6. பொதுவாக நாம் சபைகூடுதலுக்கு எதற்காக செல்லவேண்டும்?
நம்முடைய தவறு எங்கு உள்ளது என்று கண்டு அதை சரிசெய்வதற்காகவே நாம் ஆலயத்திற்கு வருகிறோம். ஏனென்றால் நாம் சிறு சிறு தவறுகளை செய்கிறவர்களாய் இருக்கிறோம். வேறு ஏதாகிலும் ஓர் நோக்கத்திற்காக நாம் ஆலயத்திற்கு வருகிறோம் என்றால் இங்கிருந்து பிரயோஜனமான எதையாகிலும் நாம் பெற்றுக்கொள்ள இயலாது. நம்முடைய தவறான பாகம் எது என்றும், நம்முடைய பெலவீனம் எது என்றும், நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதையும் கண்டு நம்முடைய நம்பிக்கையை பலம் உள்ள ஒருவரிடம் ஒப்படைக்கும் நோக்கத்திற்காக கண்டிப்பாக நாம் சபைக்கு வரவேண்டியவர்களாய் இருக்கிறோம். (பரிபூரண பலவீனத்தில் விளங்கும் பரிபூரண பலம். பக்கம் 14, பத்தி 43) செய்தி இவ்வாறிருக்க ஒரு ஊழியக்காரன் சபையில் காணப்படும் தவறுகளைக் கண்டு அதை சுட்டிக்காட்டக் கூடாது, அதை கடிந்துகொள்ளக் கூடாது என சபையில் விசுவாசிகள் விரும்புவார்களாயில் அந்த சபை எப்படி உருப்படும்? ஒருக்காலும் உருப்படவே உருப்படாது! இப்படிப்பட்ட சுபாவத்தையுடைய விசுவாசிகள், அவர்களை ஆதரிக்கும் பாஸ்டர்கள் ஸ்தாபனசபை ஆவியையுடையவர்களேயன்றி, மற்றபடி அல்ல.

7. என் ஊழியம் ஊழியர்கள், விசுவாசிகளின் விருப்பு, வெறுப்பு மத்தியில் நடைபெற்று வருவதைக் குறித்து எனக்கு வேதத்தில் காணப்படும் ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. ஆகீஸ் என்னும் காத்தின் ராஜா, தாவீதுவிடம் நீ உத்தமன், நீ என்னிடத்தில் வந்து சேர்ந்த நாள் முதல் இன்றுவரைக்கும் நான் உன்னில் ஒரு பொல்லாப்பும் காணவில்லை, ஒரு குற்றமும் உன்னில் கண்டுபிடிக்கவில்லை என்றான். ஆனால் பொல்லாதவர்களாகிய பிரபுக்கள் பார்வைக்கு தாவீது பிரியமானவன் அல்ல. 1சாமு.29:3,6. அவ்வண்ணமாகவே என்னை தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய சுவிசேஷகனாகிய ஏற்படுத்திய கர்த்தருக்கு பிரியமான பாத்திரமாக நான் இருந்தால் அதுவே எனக்குப் போதும். சபைகளின் பாஸ்டர்களும், அவர்கள் மந்தையின் ஆடுகளுக்கும் நான் பிரியமில்லாதவனாக இருந்தால் அது எந்த வகையிலும் என்னை பாதிக்காது. என்னுடைய ஊழியம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு சம்பந்தப்பட்டது. ஆதலால் தான் அவருடைய சரீரமாகிய சபையில் அவயவமாயுமுள்ளவர்கள் என்னுடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

8. அங்கு ஒரு ஊழியக்காரனின் மனைவி மேலும் கீழுமாகக் குதித்து பாடல்களை நடத்திக் கொண்டிருந்தாள். அவளோ தன் உள்பாவாடை தெரியுமளவிற்கு குறைவான ஆடை உடுத்தியிருந்தாள், மேலும் தன் தலைமயிரை கத்தரித்தும், காதுகளில் டோலக்குகளை மாட்டியும் இன்னும் பலவிதமான அலங்காரங்களை செய்தவளுமாக காணப்பட்டாள். இவ்வித காரியங்களைக் கொண்டிருந்தாலும் தாங்கள் பரிசுத்தஆவியை பெற்றவர்கள் என்று அவர்கள் கூறிக்கொள்ளுகிறார்கள். ஆனால் தேவனோ அவைகளை கடிந்துகொள்ளுகிறார். அந்தக் காரியத்தை நான் அன்று மிகவும் எதிர்த்து பிரசங்கம் செய்தேன். அதன் பின்பு அங்கு நான் திரும்பவும் அழைக்கப்படவில்லை. அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை. நியாயத்தீர்ப்பு நாளில் நான் நிற்கும் போது அவர்கள் இரத்தப்பலி என் கையில் இல்லை. (ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை, பழைய பதிப்பு பக்கம் 25, பத்தி 2) என்னுடைய ஊழியதின் பாதையில் என் நிலையும் இப்படித்தான் இருக்கிறது. பொதுவாக உண்மையும் உத்தமுமான ஊழியர்கள் நிலை இவ்வாறாகத்தான் இருக்கும்.

9. 2003, ஜுன் மாதம், டாக்டர் புஷ்பராஜ் அவர்களின் **ஜாமக்காரன்** மாத பத்திரிக்கையில் **ஜீவநீரோடை** என்ற மாதப்பத்திரிக்கையின் ஆசிரியர் சகோ.சம்சன்பால் அவர்கள் எழுதிய **ஊழியர்களை விமர்சிப்பது** சரியா கேள்வி பதில் வாசிக்க நேரிட்டது. அதில் எனக்கு ஆவியில் ஒருமனப்பாடு இருந்தது. ஆதலால் இங்கு நான் அவருடைய கேள்வி பதில்களை மையமாகக் கொண்டு ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி எனது கருத்துக்களையும், இக்காலத்துக்குரிய செய்திகளையும் அத்துடன் இணைத்து உங்களுக்கு ஒரு செய்தித் தொகுப்பு எழுதுகிறேன். சகோ.சம்சன்பால் அவர்களுக்கும், டாக்டர் புஷ்பராஜ் அவர்களுக்கும் எனது நன்றி.

10. கர்த்தரால் ஒருவன் அனுப்பப்பட, அவன் சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்க; சுவிசேஷத்திற்கு எல்லாரும் கீழ்படியவில்லையாதலால், நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டு சுவிசேஷத்தை விசுவாசிக்க, அவர்கள் மனந்திரும்பி ஒவ்வொரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்று, அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோநியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள். அவர்கள் தான் உண்மையான விசுவாசி. இப்படியாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். ரோ.10:13-17, அப்.13:48, 2:37-47.

11. இந்த விசுவாசிகள் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காகவும் கர்த்தர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். எபே.4:11-13. இந்த ஐந்துவகை ஊழியங்கள் பொதுமக்கள் மத்தியில் செய்யும் சுவிசேஷ ஊழியம் அல்ல. மாறாக இந்த ஊழியங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய எந்த மனுஷனாலும் அல்ல, ஒருவனுடைய முயற்சியினாலும் அல்ல, மாறாக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியங்கள். ஐந்துவகை ஊழியத்தில் இருக்கிறேன் எனக் கூறிக்கொண்டு ஒரு பாஸ்டர், ஒரு சுவிசேஷகன் பொதுமக்கள் மத்தியில் சென்று கிராம ஊழியம், தெரு ஊழியம் என்று செய்துகொண்டு வருவார்களாயின் அவர்கள் தங்கள் அழைப்பை உறுதிப்படுத்தாத, தேவ சித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறவர்களாவார்கள். நாம் அவர்களை அடையாளம் கண்டுகொண்டு, அவர்களுடன் ஐக்கியங்கொள்ளாது நம்மை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஊழியம் கர்த்தரால் சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை சபையில் காணப்படும். ஆதலால் ஏழாம் சபைக்கால தூதன் இந்த ஐந்துவகையான ஊழியங்களையும் நிறைவேற்றிவிட்டார், இப்பொழுது இந்த ஐந்துவகை ஊழியங்கள் கிடையாது, மேலும் பாஸ்டர் ஊழியம் மட்டுமே உண்டு என்று உபதேசிக்கிற ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சாபத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்துமாயிருக்கிறது.

12. இப்பொழுது இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மத்தியிலும் மூன்று பிரிவினர்கள் உண்டு. முதல் வகை **உண்மையான விசுவாசி**. இவர்கள் ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்று பேதுரு கூறிய வண்ணம், தேவனையும் அவருடைய வார்த்தையையும் பற்றிக்கொண்டு, அந்தந்த காலத்துக்குரிய செய்தியில் நிலைத்திருந்து, செடியாகிய அவரில் கொடியாக நிலைத்திருந்து கனி கொடுக்கிறவர்கள். யோ.6:68,15:1-5. ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களானார்கள். எபி.10:39.

13. இரண்டாம் வகை **அவிசுவாசி**. சபையில் கடினமான உபதேசங்கள் வரும்பொழுது, ஏனென்றால் வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டு, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பித்தலுக்கும் பிரயோசனமுள்ளதாயிருப்பதால், யார் இதைக் கேட்பார்கள் என்று கூறி பின்வாங்கிப் போகிறவர்கள். பாருங்கள் இன்று சபையில் பெண்கள் தங்கள் தலைமயிரை சேலை முந்தாணையினால் முக்காடிட்டுக் கொள்ளுகிறார்கள், சம்பாதிக்கும் ஆண்கள் தசமபாகம் ஒழுங்காகக் கொடுப்பதில்லை, தங்கள் மனைவிகளை வெளிஉலகத்தில் வேலை செய்ய அனுப்பி, அதன் மூலம் தங்கள் வருமானத்தை அதிகரித்துக்கொண்டு சுகபோகமாக வாழ விரும்புகிறார்கள். தங்கள் பிரயாசங்களை கர்த்தர் ஆசிர்வதித்தது போதும் என்கிற மனப்பான்மை இல்லை. பெண்கள் வீட்டில் தரித்திருக்க விரும்புகிறதில்லை. பெண்கள் பொன் ஆபரணங்களினால் தங்களை அலங்கரித்துக்கொள்ளுகிறார்கள். உள்ளத்தில் ஒருமனப்பாடு இல்லை, ஆனால் மாய்மாலம் பண்ணி ஒருவரையொருவர் கட்டித்தழுவிக்கொண்டு கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்குகொள்ளுகிறார்கள். இதுகுறித்து சபையை கண்டித்து உணர்த்தும் போது. இது கடினமான உபதேசம், யார் இதன்படி நடக்கக் கூடும் எனக் கூறி பின்வாங்கிப் போகிறார்கள். இடறுகிறதெற்கென்றே நியமிக்கப்பட்ட இவர்கள் கெட்டுப்போக பின்வாங்குகிறவர்களாயிருக்கிறார்கள். யோ.6:60,66, 1பேது.2:8, எபி.10:39.

14. மூன்றாம் வகை **பாவனை விசுவாசி**. இவர்கள் யூதாசைப் போன்றவர்கள். இந்த வகுப்பினர் தேவனை அறிந்திருக்கிறோம் என்று அறிக்கைப் பண்ணுகிறார்கள். கிரியைகளினாலே அவரை மறுதலிக்கிறார்கள். இவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்படியாதவர்களும், எந்த நற்கிரியையும் செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள். தீத்.1:16. கடைசிக்கால செய்தி, கடைசிக்கால செய்தி எனக் கொக்கரிக்கிறார்கள். ஆனால் கடைசிக்கால செய்திக்காக இவர்கள் எதை இழந்தார்கள்? என்ன உபகாரம் செய்தார்கள்? ஊழியங்களை தாங்கினார்களா? ஊழியக்காரனை ஆதரித்தார்களா? தங்களுக்கென்று சொத்து சுகங்களையும், ஆஸ்திகளையும் சேர்த்துக்கொண்டு போனார்களேயன்றி மற்றபடியல்ல. எந்த ஒரு விசுவாசியும் நற்கிரியைகளைச் செய்ய கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறான். ஆனால் இவர்களிடம் எந்தவிதமான நற்கிரியையும் காணமுடியவில்லை. தனக்கடுத்தவைகளே எப்போதம் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

15. அவ்வாறாகவே ஊழியங்களின் மத்தியில் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்களின் வேஷத்தை தரித்துக்கொண்டவர்கள் உண்டு. ஏனென்றால் சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான். சாத்தானுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வார்கள். 2கொரி.11:13-15. கடைசி நாட்களின் கொடிய காலமாகிய இந்த லவோதிக்கேயா சபையின் முடிவுகாலத்தில் தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பலனை மறுதலிக்கிறவர்கள் அநேகர் உண்டு. எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் தேவ பக்தியின் வேஷத்தை தரித்தவர்கள் பில்லிசூனியத்திலிருந்து விடுதலை, வியாதியிலிருந்து விடுதலை, கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை, பசி பஞ்சத்திலிருந்து விடுதலை, உன் வாழ்க்கையே இன்ப மயமாக மாறப்போகிறது எனக் கூறி பெண் பிள்ளைகளை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இது குறித்து 2தீமோ.3:1-7 வரை தியானியுங்கள். இதனால் தான் இந்நாட்களில் ஊழியர்கள் அதிகமாக பெண்களை ஆதாயப்படுத்தி, அவர்களைக் கொண்டு தங்கள் சபையை நிரப்புகிறார்கள்.

16. **கேள்வி** : 1
கர்த்தருடைய ஊழியக்காரன் என்று தன்னை அழைத்துக்கொள்ளும் ஒருவன், அவ்வண்ணமாகவே அழைத்துக்கொள்ளும் மற்றொரு ஊழியக்காரன் மற்றும் அவனுடைய ஊழியத்தில் காணப்படும் தவறுகளையும் குறைகளையும் சுட்டிக்காட்டி விமர்சனம் செய்யலாமா?

**பதில் : கர்த்தருடைய சமூகத்திலிருந்து விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன்** என்ற செய்தியில் பக்கம் 39, பத்தி 122; பக்கம் 42, பத்தி 130; பக்கம் 43, பத்தி 133யை தியானிக்கும் போது நீங்கள் கீழ்கண்ட சாராம்சத்தைக் காணலாம். தேவன் நிமித்தம் நீங்கள் பொல்லாங்கானவைகளுக்கு விரோதமாய் கூக்குரலிடுகிறீர்கள்; பாவத்துக்கு விரோதமாய் கூக்குரலிடுகிறீர்கள், தவறுக்கு விரோதமாய் கூக்குரலிடுகிறீர்கள். அந்தச் செய்தியை அளிப்பதற்கென தேவன் ஒரு தீர்க்கதரிசியை அருளி, அவனை அதற்கென்று நியமித்தார். அவர் வேறொரு தீர்க்கதரிசியை அனுப்பியிருக்கலாம். ஆனால் அவர் யோனாவை அதற்கென்று நியமித்தார். ஆதலால் எலியா அதை செய்திருக்க முடியாது. எரேமியா கூட அதை செய்திருக்க முடியாது. மோசேயினால் கூட அதை செய்திருக்க நிச்சயமாக முடியாது. தேவனுடைய நியமத்தின்படி யோனா தவிர வேறு யாரும் அதை செய்ய முடியாது. தேவன் ஒன்றை உன்னிடம் கூறுவாரானால் நீ அதை செய்தேயாகவேண்டும். நான் நினிவேக்கு விரோதமாக கூக்குரலிட அங்கு செல்லுகிறேன். மற்றவர்கள் விரும்பினால் தர்ஷிஸ்க்குப் போகட்டும். எனக்கு தேவனுக்கு முன்பாக ஒரு கடமை உண்டு.

17. பாருங்கள், ஒரு ஊழியக்காரனுடைய தவறு குறித்து நீங்கள் **சிறந்த வேலைப்பாடு** செய்தியில் பக்கம் 9, பத்தி 13, 14யை வாசியுங்கள். ஒரு தவறு நேர்ந்தாலும் கூட அது அந்த ஊழியக்காரனை மட்டும் அழித்துவிடாமல் அந்த ஊழியக்காரனை பின்பற்றும் அனைவரையும் அழித்துவிடுகிறது. பிரியமானவர்களே உங்களைக் கொண்டு நான் நம் மத்தியிலுள்ள கல்வாரி சபையில் சேர்க்க முடியாது. ஏல்பெத்தேலில் கொண்டு சேர்க்க முடியாது. மணவாட்டி கூடாரத்தில் கொண்டு சேர்க்க முடியாது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கூடாரத்தில் கொண்டு சேர்க்க முடியாது. எனக்கு எந்தச் சபையும் தெரியாது. என் விசுவாசம் ஒன்றின்மேல் மாத்திரமே உள்ளது. அது தான் தேவனுடைய வார்த்தை. இக்காலத்துக்குரிய செய்தி.

18. தீர்க்கதரிசி தன்னைக் குறித்து என்ன கூறுகிறார்? I am known to be a critic, but I 'd – I am not critical, only anything that's wrong. We should critize wrong. (The way of a true prophet. Page 11, Para 2 ) இப்பொழுது பாருங்கள், கர்த்தருடைய நாமத்தினால் ஒரு ஊழியக்காரன் தன் ஊழியத்தில் செய்கிற தஹ்றுகள் அநேகரை சத்திய மார்க்கத்தில் நின்று விலகிப்போக செய்கிறது, தேவனுடைய ஆலோசனையை விட்டு விலகிப்போகச் செய்கிறது. ஆதலால் அவைகளுக்கு எதிராக மற்றொரு ஊழியக்காரன் குரல் எழுப்புவதில் தவறு இல்லை. ஏனென்றால் இது தனிப்பட்ட நபர்களுக்கு இடையே உள்ள ஒரு பிரச்சனை அல்ல. இது ஆயிரக்கணக்கான மக்களை பாதிக்கும், விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடும் ஒரு காரியமாகும். அந்த தவறுகளுக்கு விரோதமாக குரல் எழுப்பும் ஒரு ஊழியக்காரன் அந்த நேரத்திற்கென்று தேவனால் நியமிக்கப்பட்டவனாயிருக்கிறான்.

19. எரேமியா தீர்க்கதரிசியை கர்த்தர் அழைத்தபோது, நீ கட்டுகிற, நாட்டுகிற ஊழியத்தை மட்டும் செய் என்று கூறாமல் பிடுங்கவும், இடிக்கவும், அடிக்கவும், கவிழ்க்கவும் செய் என்றே கட்டளைக் கொடுத்தார். எரே. 1 : 10. ஆனால் ஒரு ஊழியக்காரனுக்கு நல்லவைகளைக் கட்டவும். தவறானவைகளை இடிக்கவும் அதிகாரம் உண்டு. ஆம் உண்மையான சபையை கட்டவும், கள்ள சபையை இடிக்கவும் அதிகாரம் உண்டு. அதுவே ஊழியம். தவறானவைகளைக் குறித்து மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது ஒவ்வொரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனது கடைமையாகும்.

20. கள்ள போதகனாகிய இமெநேயுவின், பிலேத்துவின் ஊழியத்தைக் கண்டித்து பவுல், தீமோத்தேயுக்கு எழுதுகிறான். 2தீமோ.2 :16 -18. மேலும் தேமா என்பவன் இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து சென்றதைக் குறித்தும் எச்சரிக்கிறான். 2 தீமோ. 4 : 10.

21. சபையை சீர்படுத்த தேவன் அப்போஸ்தலருக்கு அதிகாரம் கொடுத்தார். எனவே சபையானது அப்போஸ்தலர்கள் போதகங்களின் மேல் கட்டப்பட்டதேயன்றி வேறுயாருடைய போதகங்களின்மேல் கட்டப்படவில்லை. நாம் யாரை வேசி என்று அழைக்கிறோம்? தன் கணவனுக்கு உண்மையாயிராத ஒருத்தியை. மணவாட்டி சபை என்று அவள் உரிமை கோரி, தேவனுடைய வார்த்தையை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக தவறான போதகங்களை அவள் கொடுக்கிறாள். ஏவாள் செய்தவிதமாக அவள் பிசாசுக்கு செவி கொடுத்ததினால் அவள் மூலமாக மரணமும், துயரமும் உலகில் பிரவேசித்தன. அவள் தேவனுடைய வார்த்தையை அவிசுவாசித்து ஆவிக்குரிய விபச்சாரம் செய்ததன் விளைவாக இவை தோன்றின. அவள் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக ஆவிக்குரிய விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளாள்.

22. பாருங்கள், இந்நாட்களில் சபை பாஸ்டர் சபையில் பற்பல தவறான போதகங்களைக் கொண்டு வந்து சபையை குழப்பத்துக்குள்ளாக்குகிறார். ஒவ்வொரு பாஸ்டரும் சுய புத்தியின்மேல் சார்ந்து தங்கள் சுய போதகங்களை சபைக்குள் நுழைத்து சபையில் எங்கும் ஒருமனம் ஒற்றுமை காணக்கூடாதபடி செய்கிறார்கள். இக்காலத்துக்குரிய செய்தியை இவர்கள் புறக்கணித்து தங்கள் மனம் போன போக்கில் சபையை வழிநடத்தி மந்தையை மோசம் போக்குகிறார்கள். சபையை ஆவிக்குரிய விபச்சாரத்தில் வழிநடத்துகிறார்கள். ஒரு பாஸ்டர் பெண்கள் சுடிதார் அணியக்கூடாது என்கிறார். மற்றொரு பாஸ்டர் அணியலாம் என்கிறார். ஒரு பாஸ்டர் திருமண அடையாள சின்னமாக தாலி / மோதிரம் அணியாதே என்கிறார். அடுத்த நபர் அணி என்கிறார். ஒரு பாஸ்டர் இராப்போஜனம் எடுக்காதே என்கிறார். அடுத்த நபர் எடு என்கிறார். ஒருவர் ஐந்துவகை ஊழியங்கள் உண்டு என்கிறார். அடுத்த நபர் இல்லை என்கிறார். ஒருவர் சபைக்கு பாஸ்டரே ஆல்-இன்-ஆல் என்கிறார். அடுத்த நபர் அவர் விசுவாசிகளையும் கலந்து ஆலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்கக்கூடாது என்கிறார். இப்படியாக எங்கும் எதிலும் குழப்பம். ஏன்? சபை கள்ள கபடமுள்ள வேலையாட்களால் நிறைந்திருப்பதே இதற்கு காரணம். ஆதலால் தான் ஐந்துவகை ஊழியத்திலுள்ள ஊழியர்கள் அவர்களுடைய உபதேசங்கள் தவறு என சுட்டிக்காட்டி சபையை சரியான உபதேசத்துக்கு கொண்டு வர வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

23. Let me stand here, Lord, against everything that's called wrong, everything that looks wrong, I don't care what any one says let me stand, Lord. (Strait is the gate. Para 177) I said " It is my duty to speak against anything that's wrong!" God help the preacher that hasn't got a discernment of the right enough! Anything that's wrong. A preacher that can't discern the need of his people by the Holy-Spirit. God said "This body is a temple of the Holy Ghost. If you defile it, I'll destroy it!" We should preach against it. (Discerning the body of the Lord. Page 8, Para last but one) தவறு என்று அழைக்கப்படும் எதற்கும் நான் எதிர்த்து நிற்க கர்த்தாவே அருள்புரியும். மற்றவர்கள் என்ன சொன்னாலும் அதுகுறித்து எனக்குக் கவலையில்லை. எது தவறு என்று நிதானிக்கமுடியாத பாஸ்டருக்கு கர்த்தாவே உதவிசெய்யும். நாம் தவறுக்கு விரோதமாக குரல்கொடுத்து பிரசங்கிக்கவேண்டும்.

24. இக்காலத்துக்குரிய செய்தியும் ஒரு ஊழியக்காரன் தன் ஊழியத்தில் உண்மையும் உத்தமுமாகவும், நேர்மையாகவும் இல்லாமல் போனால் அவனுக்கு எதிராக ஒரு குரல் ஒலித்துக்கொண்டேயிருக்கும் என்று கூறுகிறது என்பதை பலமுறை உங்களுக்கு எழுதியுள்ளேன். ஆதலால் ஒரு ஊழியக்காரன் மற்றொரு ஊழியக்காரனுடைய ஊழியத்தில் காணப்படும் தவறுகளையும் குறைகளையும் சுட்டிக்காட்டி விசுவாசிகள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது தவறு இல்லை. இது அநேக ஆத்துமாக்கள் தவறான பாதையில் செல்லாமல் சரியான பாதையில் செல்ல வழிவகுக்கும்.

25. கேள்வி : 2

ஒரு ஊழியக்காரனிடம் அவனுடைய ஊழியத்தின் பாதையில் நலமான காரியங்கள் பல இருக்க. சில குறைகள் ஆங்காங்கே காணப்படலாம். இப்படியிருக்க குறைகளை விமர்சிக்கலாமா?

பதில் : ஒருவரிடம் மெச்சிக்கொள்ள வேண்டிய அநேக ஆவிக்குரிய காரியங்கள் காணப்படலாம். ஆங்காங்கு காணப்படும் குறைகள், அநேக நிறைவான காரியங்களை பயனற்றதாக்கிவிடுகிறது. பாருங்கள் சில விசுவாசிகள் என்னிடம் வந்து தங்கள் பாஸ்டருடைய பலசெய்திகள் தங்கள் ஆத்துமாவுக்கு மிக்க பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. மேலும் சபையில் மாதந்தோறும் முழுஇரவு ஜெபம் வாரந்தோறும் வேதபாட வகுப்பு, இன்னும் வீடுகளில் வாரந்தோறும் ஜெபக்கூட்டம் இப்படியாக தினசரி ஏதாவது ஒரு கூடுதல் விசுவாசிகள் மத்தியில் உண்டு. அது ஆசிர்வாதமாக இருக்கிறது. ஆனால் பாஸ்டர் சபை விசுவாசிகளின் தசமபாகம், காணிக்கைகளைக் கொண்டும், அதோடு மட்டுமல்ல இன்னும் பல வழிகளில்

பணம் சேகரித்து தனக்கென்று ஒரு மிக்க வசதிகளைக் கொண்ட வீடு கட்டி, அதோடு மட்டுமல்லாது சபை கூடுதலுககாக ஒரு பெரிய கட்டிடத்தையே கட்டி அனைத்தையும் தன் பெயரிலே பத்திரம் எழுதிக்கொண்டாரே; தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் விசுவாசிகள் பணத்தினால் சொத்து சுகங்களையும் ஆஸ்திகளையும் சேர்த்துக்கொண்டாரே என்று மனக்கண்கள் திறக்கப்பட்டவர்கள் புலம்பினார்கள்.

26. பாருங்கள், இந்த பாஸ்டரிடம் அநேக ஆவிக்குரிய நன்மையான காரியங்கள் இருக்கலாம். ஆனால் அவர் அனைத்தையும் தன் சுயநலனுக்காகத் தானே பிரயோஜனப்படுத்துகிறார். மக்களை கவர்ச்சி செய்து அதன் மூலம் தன் பொருளாதார நிலையைதானே உயர்த்திக்கொள்ளுகிறார். அவருடைய வாழ்க்கையில் உண்மையில்லை, நேர்மையில்லை. இவர்கள் உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய் பிடித்து, பொருளாசையில் பழகிய இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகளாக, மற்றும் செம்மையான வழியை விட்டு தப்பிநடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியை பின்பற்றி, அநீதியின் கூலியை விரும்புகிறவர்களாகவே இருக்கிறார்கள். 2பேது.2:14,15. இவர்களது ஒரு பக்கம் ஊழியம் மற்றொரு பக்கம் மாய்மாலம்.

27. இதோடு மட்டுமல்லாது தாங்கள் அநீதியின் கூலியினால் சம்பாதித்த பங்களா, கார், பல லட்சம் மதிப்புள்ள சபை கட்டிடம் பிறர் கைக்கு சென்றுவிடக் கூடாது என நயவஞ்சகத்தினால் தங்களது பிள்ளைகளை இளம்பிராயத்திலிருந்தே தங்களுக்குப் பின் பாஸ்டர் ஊழியம் தங்கள் ஸ்தானத்திலிருந்து செய்ய ஆயத்தப்படுத்துகிறார்களே! கர்த்தருடைய ஐந்துவகை ஊழியத்தையும் குடும்ப வாரிசு ஊழியமாக மாற்றுகிறார்களே. இப்படிப்பட்டவர்களுக்கு இக்காலத்துக்குரிய செய்தியில் குறைவில்லை. இவர்களும் யூதாசை போன்றவர்கள் தானே. யூதாசும் சுவிசேஷம் பிரசங்கித்தான், அற்புத அடையாளங்களை செய்தான். ஆனாலும் அவன் ஒரு திருடன், கேட்டின் மகன். ஒருவனும் தன்னைக் குறித்து யாரும் குற்றப்படுத்தாதபடிக்கு கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளை செய்ய வேண்டுமென 2கொரி.8:20,21 வசனங்களில் வாசிக்கிறோம்.

28. தீர்க்கதரிசியும் இது குறித்து என்ன கூறுகிறார்? ஓ! போதகனே உனக்கு என்ன நேர்ந்தது? இனி உன்னை தேவனுடைய ஊழியக்காரன் பாஸ்டர் என அழைத்துக்கொண்டு உன் ஒரு சாண் வயிற்றின் ஆகாரத்துக்காக உன்னுடைய புத்திர சுவிகாரத்தை உலக கலப்படத்திற்கு விற்று பெரிய மாளிகையில் நீ வாழ்ந்து, பல லட்சம் மதிப்புள்ள ஆலயத்திற்கு நீ சொந்தக்காரனாகவும், மேய்ப்பனாகவும் இருக்கலாம். ஆனால் ஏசா எதை அறுத்தானோ அதையே நீயும் அறுப்பாய் (ஆதி 27வது அதி)என்கிறார். இது குறித்து நீங்கள் **ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை** பக்கம் 31 முதலாம் பத்தியில் தியானிக்கலாம்.

29. இதுகுறித்து சகோ.சம்சன்பால் எழுதுகிறார்: ஒரு கோப்பை பாயாசம் உங்கள் கையில் தரப்படுகிறது. அதில் பருப்பு, பால், சேமியா, ஜவ்வரிசி, முந்திரி பழம், முந்திரி பருப்பு, ஏலக்காய் ஆகிய அனைத்து பொருள்களும் சரியான அளவு சேர்க்கப்பட்டுள்ளது. இதைக்கொண்டு பாயாசம் தயார் செய்யப்பட்டாயிற்று. இப்பொழுது இந்த பாயாசத்தை நீங்கள் பருகி, அதை மெச்சிக்கொள்வீர்களா? நிச்சயமாக அவ்வாறு செய்யமாட்டீர்கள். ஏனென்றால் சர்க்கரை அதில் சேர்க்கப்படவில்லை. ஆதலால் அந்த பாயாசத்தை நீங்கள் மெச்சிக்கொள்ளாமல் அதிலுள்ள குறையை அதாவது சர்க்கரையின்மையை சுட்டிக்காட்டுவீர்கள். ஏனென்றால் அந்த பாயாசத்திற்கு சுவை கொடுப்பதே அந்த சர்க்கரைதான். தித்திப்பு இல்லாத பாயாசத்தை யாரும் பருக, விரும்ப மாட்டார்கள். பாருங்கள், ஒருவனிடம் விசுவாசம் இருக்கிறது ஆனால் கிரியை இல்லையே. கிரியை இல்லாத விசுவாசம் செத்ததுதானே. அவ்வண்ணமாகவே இவர்களிடம் அநேக நல்ல காரியங்கள் காணப்படலாம். ஆனால் ஜீவியத்தில் பொருளாசை. இவர் ஒரு பணப்பிரியராக இருப்பதினால் இவரை விட்டு விலகு என்றுதானே பவுலும் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான். எங்கு ஒரு பாஸ்டர், தன்னை ஆதரித்துவரும் விசுவாசிகளின் வாழ்க்கை வசதிகளைவிட அவர் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறானோ அங்கு அவனுடைய ஊழியத்தில் நேர்மையில்லை. அவன் பிறனுக்கானவைகளை அல்ல, தனக்கானவைகளையே தேடுகிறார்.

30. **கேள்வி : 3**

ஒரு ஊழியக்காரன் தவறு செய்தால், அதை விமர்சிப்பதைவிட அவனுக்காக பாரத்தோடு ஜெபிக்கலாம் அல்லவா?

**பதில்** : இது பொதுவாக, பெரும்பாலான மக்கள் கூறுவதாகும். இரவும் பகலும் ஜெபிக்கிறவராகக் காணப்பட்ட இயேசு கிறிஸ்து; பரிசேயர், சதுசேயரின் மாய்மாலச் செயல்களையும் தேவனுடைய வார்த்தைக்கு எதிரான பாரம்பரியங்களையும், ஜனங்களை வஞ்சிக்கும் செயல்களையும் கண்டபோது, பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று பாரத்தோடு ஜெபிக்காமல், அவர்களை பகிரங்கமாக எதிர்க்கவில்லையா? கண்டனம் பண்ணவில்லையா? அவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று மக்களுக்கு அறிவுரை கூறவில்லையா? தேவனுடைய வார்த்தைக்கு புறம்பான காரியங்களை செய்கிறவர்களுக்கு ஜெபிப்பது தான் கர்த்தருடைய தகுந்த தேவநீதியான வழியென்றால், இயேசு கிறிஸ்து ஏன் பரிசேயர்களையும், சதுசேயர்களையும் கடுமையாக விமர்சிக்க வேண்டும்? அதோடு மட்டுமல்ல சீஷர்களை நோக்கி; நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரியும், சந்தைவெளிகளில் வந்தனங்களை அடையவும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி, விதவைகளின் வீடுகளை பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று திரளான ஜனங்கள் கேட்கத்தக்க கூறினாரே. லூக்.20:45-47. இன்று இந்த காரியத்தைத்தானே அவரது ஊழியக்காரர்கள் செய்கிறார்கள்.

31. தேவனுடைய நியமங்களுக்கு எதிராக செயல்படுகிறவர்களுக்கு ஜெபிப்பது தான் தேவனுடைய ஆலோசனையென்றால், தேவன் எதற்காக எரேமியா, எசேக்கியேல், ஓசியா, யோவான்ஸ்நானன் போன்ற தீர்க்கதரிசிகளை எழுப்பி, மதத்தலைவர்களையும் மக்களையும் எச்சரிக்கும்படி அனுப்பினார்? தகாத உபதேசங்களை போதிக்கிறவர்களின் வாயை அடக்கவேண்டும் என பவுல், தீத்துக்கு எழுதுகிறானே.

32. மும்பையில் தோன்றி, பின் பற்பல இடங்களுக்கு பரவிய அக்கினிஸ்தம்பம் கடுமையாக விமர்சிக்கப்பட்டு மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை கொண்டுவந்தபின் தானே அடங்கியது. அந்த

அக்கினிஸ்தம்பம் எத்தனையோ மக்களை ஏமாற்றி லட்சக்கணக்கில் பணம் சம்பாதித்ததை நீங்கள் அறியாதவர்களல்லவே. இது ஒரு ஊழியக்காரன் பணம் சம்பாதிக்க சாத்தான் வகுத்த வழிதானே.

33. பொதுவாக ஊழியர்கள் மத்தியில் பணம் எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. பணத்துக்காகத் தான் வெளிநாட்டினருக்கு வால் பிடிக்கிறார்கள். தகாதவைகளை, தவறானவைகளை உபதேசிக்கிறார்கள், டாக்டர் பட்டம் பெறுகிறார்கள், சபையைக் கட்டுகிறார்கள், சபையை உடைக்கிறார்கள், முழுக்குடும்பத்தையும் கவிழ்த்துப் போடுகிறார்கள். பணத்துக்காக மக்களை ஏமாற்றும் அரசியல்வாதி, ஏமாற்றும் வழிகள் அனைத்தையும் நம்முடைய சபை பாஸ்டர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளுகிறார்களோ என்று ஐயப்படவேண்டியிருக்கிறது. பொதுவாகக் கூறப்போனால் பணத்துக்காகத் தான் சபை ஊழியமே இந்நாட்களில் இக்காலத்துக்குரிய செய்தியில் நடைபெறுகிறது. உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனை காண்பது மிகமிக அரிதாயிருக்கிறது. ஒருமுறை ஒரு சகோதரன் என்னை அணுகி இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் எனக் கூறி அநேக ஜெபவீடுகள் சந்து பொந்துக்களில் சென்னை பட்டணத்தில் அதுவும் முக்கியமாக பல்லாவரம் பகுதிகளில் காணப்படுகிறதே. அங்கு ஒரு ஆவிக்குரிய சபையை எனக்கு சுட்டிக்காட்ட முடியுமா என்று கேட்டார். நான் மவுனம் சாதித்தேன். பரவாயில்லை ஐயா, ஒரு நேர்மையான ஊழியக்காரனிடமாவது என்னை வழிநடத்த முடியுமா என்று கேட்க அதற்கும் மவுனம் தான் எனது பதிலாக இருந்தது.

34. என்னை பொருத்த அளவில் கடைசிக்கால செய்தி ஒன்று உண்டு. அது கிறிஸ்துவின் மணவாட்டியை அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டு வருகிறது. ஆனால் மணவாட்டி பத்து லட்சத்தில் ஒருத்தியாகத் தான் இருக்கக்கூடும் அது நானாக இருக்கட்டும் என்ற நம்பிக்கையில் ஓடிக்கொண்டிருக்கிறேன்.

35. பணத்திற்காக ஒரு ஊழியக்காரன் படும் பிரயாசங்களைப் பாருங்கள். குமரி மாவட்டம் தேங்காய் பட்டிணத்தை மையமாகக் கொண்டு பாஸ்டர் கலிஸ்த்ராஜ் என்பவர் ஊழியஞ்செய்து வருகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னை உண்மையுள்ளவன் என்று எண்ணி, ஊழியத்திற்கு ஏற்படுத்தினதாகக் கூறுகிறார். காரியங்களை பார்க்க போனால் சகோ.டேனியல் கிறிஸ்டியான் தான் அவரை ஏற்படுத்தியிருப்பார் போல் தெரிகிறது. இவர் பல ஆண்டுகளுக்கு முன்பு என்னை திருவைகுண்டத்தில் என் இல்லத்தில் வந்து சந்தித்தாராம். அப்பொழுது நான் உழைத்து ஊழியம் செய்து பிழையுங்கள் என்று கூறினதினால் மனம்நொந்து அதன்பின் அவர் என்னை எதற்கும் அனுகவில்லையாம். கர்த்தருடைய கிருபையினால் இந்நாட்கள் ஒன்றில் நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தபோது அவர் இந்த விபரத்தை என்னிடம் கூறினார்.

36. நான் அவரை சந்தித்த போது, தான் பல இடங்களில் சபை ஆரம்பித்து ஊழியம் செய்து வருவதாகவும், தற்போது தலைமையிடமாக சபை கூடிவரும் இடம் தனக்குரியது அல்ல. அது மற்றொரு ஊழியருக்கு சொந்தமானது என்றும் அவர் அதை கேட்கும் பட்சத்தில் தான் அந்த இடத்தைக் கொடுத்துவிட வேண்டும் எனவும், தற்போது அவரிடமிருந்து எந்தவிதமான நெருக்கடியுமில்லை, ஆனாலும் தனக்கென்று ஒரு சபை கட்டிடம் கட்ட விரும்புவதாகவும், அதற்காக பணஉதவிகளுக்கு ஏற்பாடு செய்து தரும்படி என்னை கேட்டுக்கொண்டார். எனக்கு இந்தக் காரியத்தில் உடன்பாடு கிடையாது. ஆனாலும் ஓரிரு முறை சந்தித்த வேளைகளில் அவர் இது குறித்து திரும்ப திரும்ப கேட்டுக்கொண்டதால் எனக்கு அறிமுகமான ஒரு கோடீஸ்வர நண்பரைச் சந்திக்க மிக்க பாரத்தோடு சென்றேன். அவரை சந்தித்தேன், ஆனால் இது குறித்து பேச, எந்த நோக்கத்திற்காக சென்றேனோ அந்த நோக்கத்தைக் குறித்து அவரிடம் பேச கர்த்தர் என்னை அனுமதிக்கவில்லை. ஆதலால் இந்தக் காரியம் தேவனுடைய சித்தம் இல்லையென்று முடிவுசெய்தேன்.

37. அடுத்து அவர் சபைக்கு நான் ஓரிருமுறை சென்றபோது எல்லாமே தலைகீழாகக் காணப்படுவதைக் கண்டேன். பதினெட்டு வருடமாக ஊழியம் செய்கிறேன் என்கிறார். ஆனால் சபையில் எந்தவிதமாக ஒழுங்கும் கிடையாது. சிலர் முக்காடிட்டும், சிலர் முக்காடிடாமலும்; சில பெண்கள் ஆபரணங்களை அணிந்தும், சில பெண்கள் அணியாமலும்; சிலர் திருமண நல்மனசாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக அணியும் தாலி/மோதிரம் அணிந்தும், சிலர் அணியாமலும்; சுமார் 90%க்கு மேல் சபையில் பெண்களாகவேயிருந்தனர். அதோடு மட்டுமல்ல ஞாயிறு காலை ஆராதனையில் ஆண் பெண் அனைவரும் எழுந்துநின்று ஒவ்வொருவராக சாட்சி கூறியபின் தான் உட்கார வேண்டும். இப்படியாக அநேக ஒழுங்கின்மைகளைக் கண்டு அவைகளை கடிந்துகொண்டதோடு மட்டுமல்ல, அவரோடு அதிகம் தொடர்பு வைத்துக்கொள்வதை விரும்பாத நிலையில் இருந்தேன்.

38. மேலும் ஞாயிறு காலை ஆராதணை ஒரு இடத்தில். ஞாயிறு மாலை ஆராதணை மற்றொரு இடத்தில். அங்கு தொலைக்காட்சிப் பெட்டி முன் உட்கார்ந்து ஆராதணை நடத்துவதைக் கண்டேன். மேலும் சபையில் தான் ஒருவர் மட்டும் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, மற்றபடி குடும்பத்தில் யாரும் (மனைவி, மக்கள்) சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவர் சபையில் செய்திக் கொடுப்பது எனக்கு ஆவிக்குரியதாகத் தோன்றவில்லை. பொதுவாக பணத்துக்காகவே இவர் மனுஷர்களை பிரியப்படுத்திக்கொண்டு ஊழியம் செய்வதை அறிந்தேன்.

39. அவரும் என்னிடமிருந்து பணஉதவிகள் எதுவும் பெறமுடியாது என்று அறிந்தவுடன் என்னை புறக்கணிக்க ஆரம்பித்தார். இந்நிலையில் தூத்துக்குடியில் எனக்கு அறிமுகமான ஒரு சகோதரனுக்கும் அவர் சபையில், அவருடைய வீட்டிலிருந்து வாழும் மற்றொரு குடும்பத்தைச் சார்ந்த பெண்ணுக்கும் திருமணம் உறுதியானது. திருமணக் காரியங்களில் பெண் வீட்டாரையும், மணமகன் வீட்டாரையும் சுதந்திரமாக எந்த முடிவும் எடுக்கவிடாது தடுத்து, தானே எல்லா முடிவையும் தன் கரங்களில் கொண்டு இருவீட்டாரையும் மிக்க பாடுபடுத்துவதைக் கண்டேன். இதனால் எங்கள் இருவருக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டது.

40. திருமணத்தை மும்பை சகோ.டேனியல்கிறிஸ்டியான் நடத்தி வைப்பதாக அறியவந்தேன். எதற்காக? அவரிடம் சபைக்கட்டிடம் கட்ட பணஉதவிகள் பெறுவதற்காகும். அவரைப் பிரியப்படுத்த தன் வீட்டு முகப்பை இவ்வாறு அலங்கரித்திருந்தார், அதாவது அவர் வீட்டில் **பரிபூரண மனிதனின் வளர்ச்சி** வரைபடத்தை காலி கேசட் கேஸ்களில் தயார் செய்து வைத்திருந்தார். இது கீழ்கண்ட அமைப்பை உடையதாக இருந்தது. இது நான் 17.06.2003 அன்று அவர் வீட்டு முகப்பில் கண்ட காட்சி




2பேது.1:1-8 மத்.5:48
எபி.11:32-40 எபே.4:11-15 அப்.7:44-47 ஏசா.6:1-8

அதாவது இந்நாட்களில் சபை பரிசுத்தஆவியினால் வழிநடத்தப்படுகிறது என்பதை, பரிசுத்தஆவியின் ஸ்தானத்திலிருந்து சகோ.டேனியல்கிறிஸ்டியான் சபையை வழிநடத்துகிறார் என்று மறைமுகமாக ஒப்பிட்டு, அதாவது அவரே சபையை இந்நாட்களில் பரிபூரண வளர்ச்சிக்குக் கொண்டு செல்கிறார் என மறைமுகமாக, அவரை புகழ்ந்து, பல வசனங்களைக் கொண்டு அவரைக் கௌரவித்து அவரிடமிருந்து பணம் பறிக்க எடுத்த முயற்சி என்பதை அறியவந்தேன்.

41. இந்தப் படத்தை பார்த்தவுடனே பணத்துக்காக இந்த மனிதன் எதையும் செய்ய துணிந்துவிடுவான் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. இவரும் கர்த்தர் தன்னை உண்மையுள்ளவர் என்று இந்த கடினமான ஊழியத்திற்கு தன்னை ஏற்படுத்தினார் எனக் கூறிக்கொள்கிறார். என்ன ஒரு வெட்கக்கேடு?

42. இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன் என வாய்பேச்சு பேசும் இவர் சாது டேவிட் சுந்தரமணி, சீயோன் மலை, 136 T.H.ரோடு, தண்டையார்பேட்டை, சென்னை-600086, இது ஒரு திருத்துவ ஸ்தாபனம், இங்கிருந்து வருடந்தோறும் காலண்டர்கள் வாங்கி தன் சபையில் விலைக்கு விற்று வருகிறார்.

43. இவ்வாறாக உனக்கும் பே, உன் அப்பனுக்கும் பே பே எனக் கூறிக்கொண்டு பச்சோந்தி வேடம் போட்டு ஊழியம் செய்து வரும் இவரது நடத்தைகளை மேலும் அறிய விரும்பினால் நீங்கள் Voice of God, சென்னையில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். ஆனாலும் இவரை நம்பி ஒரு சிறு கூட்டம் இருக்கிறது. அது ஆச்சரியம் அல்ல. இந்நாட்களில் யாருக்குத்தான் கூட்டம் சேருவதில்லை? இரு மனைவிகளையுடைய ஒரு ஊழியக்காரனும் தனக்குப் பின் பத்து ஆத்துமாக்களை வைத்திருக்கிறானே!

44. சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தையும் இங்கு ஆவியானவர் வழிநடத்துகிற பிரகாரம் எழுத வாஞ்சிக்கிறேன். திருநெல்வேலி, டவுணிலிருந்து சகோ.மணி என்ற ஊழியர் இந்நாட்களில் தீவிரமாக 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது எனக் கூறி புதுக்கோட்டை சகோ.ஜெயராஜ்க்கு கையாளாக வேலை செய்கிறார். ஒரு முறை அவர் வீட்டிற்கு நானும், மும்பை சகோ.தேவதாஸ் என்பவரும் சென்றிருந்தோம். அப்பொழுது அநேக அவிக்கரிய காரியங்களை பேசிக்கொண்டிருக்கிற வேளையில் **இயேசு 33வது வயதில்** என்ற ஹ்.்.ப் மேன் வரைந்த படத்தை தன் கால்களுக்கு கீழ் போட்டு மிதித்து தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை, இப்படியிருக்க இவர்கள் ஒரு வரைபடம் வரைந்து அதை இயேசு கிறிஸ்து என்று கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள் என மிக மட்டரகமாக பேசினார். பொதுவாக நானும் அந்தப் படத்தை வீடுகளில் தொங்கவிடுவதை ஆதரிப்பதில்லை. ஆனாலும் இப்படி அந்தப் படத்தை கால்களுக்கு கீழ் போட்டு மிதிப்பது நாகரீகமாக தோன்றவில்லை என்று வாதாடினோம். ஆனாலும் அவர் கேட்டபாடில்லை. இந்த காட்சியைக் கண்ட மும்பை சகோ.தேவராஜ் அழுதேவிட்டார்.

45. சில மாதங்கள் கழிந்தது. நெதர்லாந்து சகோ.கிளாஸ்-டி-ஜங் என்பவர் அவர் வீட்டிற்கு ஒரு கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது **இயேசுவின் 33வது வயதில்** என்ற படத்தை சகோ.கிளாஸ்-டி-ஜங் பேசும்போது அவர் முன் இருக்கத்தக்கதாக சுவரில் மாட்டி வைத்திருந்ததாக சில சகோதரர்கள் என்னிடம் கூறினார்கள். சகோ.கிளாஸ்-டி-ஜங்கிற்கு தான் இக்காலத்துக்குரிய செய்தியில் தீவிரமாக ஊழியம் செய்கிறேன், சகோ.பிரன்காம் போல் தானும் அந்தப் படத்தை தன் வீட்டில் முகப்பில் மாட்டியிருக்கிறேன் என்று வெளிப்படுத்தி சகோ.கிளாஸ்-டி-ஜங்கை மனம்மகிழப்பண்ணி அவரிடமிருந்து பணஉதவிகள் பெற இந்த நாடகம் எனக் கேள்விப்பட்டேன்.

46. பிரியமானவர்களே, நமது ஊழியர்களிடமிருந்துதான் அரசியல்வாதிகள் சகல தந்திரங்களையும், மக்களிடமிருந்து எந்தெந்த வகையில் பணம் சுருட்டுவது என்ற முறைகளையும் கற்றுக்கொள்கிறார்கள். சபையின் நிலையை பாரத்து அரசியல் நிலையை நாம் புரிந்து கொள்ளலாம்.

47. இந்த படம் குறித்து தீர்க்கதரிசி என்ன கூறுகிறார்? இயேசு கிறிஸ்துவினுடைய முக குணாதிசயங்களையும், அவரையும் சித்திரமாக வரைய இந்த உலகத்தில் யாதொரு ஓவியனும் கிடையாது. எத்தனையோ பேர் இயேசு கிறிஸ்துவின் முகத்தை சித்திரமாக வரைந்திருக்கிறார்கள். அதில் ஹஃப் மேன் என்பவர் வரைந்த படத்தைவிட மேலானது ஒன்றை காணவில்லை. ஆதலால் அதை நான் உபயோகப்படுத்தும் ஒவ்வொரு பொருட்களிலும் வைத்திருக்கிறேன் என்கிறார். இதை ஆங்கிலத்தில் நீங்கள் இவ்வண்ணமாக வாசிக்கலாம். There's not an artist in the world could paint His picture, the character of His face. The best I've ever seen is that Hofmaan's Head of Christ at Thirty Three, I've got it on all literature and everything I use. That's because that look just like it (Foot prints on the sands of time. Page 61, message **Inside Life** Jan 17, 1955).

48. வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, சபையில் கள்ள கபடமுள்ள வேலையாட்கள் காணப்படுகிறார்கள். நாம் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள கர்த்தர் நம்முடைய மனக்கண்களை திறக்கிறார்.

49. ரோமத் திருச்சபையில் தேவனுடைய வார்த்தைக்குப் புறம்பான செயல்களையும், ஜனங்களை ஏமாற்றுகிறப் போலித்தனங்களையும் மார்ட்டின்லூத்தர் கண்டபோது, ஒருபுறம் ரோமத் திருச்சபையின் விசுவாசத் துரோகத்தைக் கண்டித்தார். பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். மக்களை விழிப்புணர்ச்சிக்குக் கொண்டுவந்தார். ஆனாலும் அந்த பாதகச் செயலுக்காக ஜெபிக்கவும் செய்தார். அதனுடைய விளைவு தானே ஒரு பெரிய மதச் சீர்திருத்தம் வந்தது.

50. வேதாகமத்தில் எந்த ஒரு தீர்க்கதரிசியாவது, ஊழியக்காரனாவது தேவனுடைய பெயரில் நடக்கும் தவறுகளைக் கண்டு மௌனமாகயிருந்தது உண்டோ? ஒரு ஊழியக்காரனுடைய தவறினால் அநேகர்கள் தவறான வழிநடத்தப்படும்போது, அநேகர் வஞ்சிக்கப்படும்போது, அதைக் குறித்து ஜனங்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டியது ஒரு ஊழியக்காரனுடைய கடமை. ஜெபிக்கவும் வேண்டும், அந்த தவறைத் திருத்த, அதுக் குறித்து மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த செயல்படவும் வேண்டும். ஜெபம் என்பது ஒரு மிக்க வலிமையான ஆவிக்குரிய ஆயுதம். ஆனாலும் யோபுவைப் போன்று நான் எதிலே தவறினேனோ அதை எனக்குத் தெரியப்படுத்துங்கள். யோபு.6:24. என்று கூறி தன் தவறை உணர்ந்து தன் கிரியைகளை சீர்திருத்திக் கொள்ளுகிறவனே உண்மையும் உத்தமுமானவன். ஆனால் தன் பிழைகளை உணருகிறவன் யார் என்று சங்கீதக்காரன் கேட்கிறான். சங்.19:12.

51. **கேள்வி : 4**
ஒரு ஊழியன் தவறு செய்யும் போது அல்லது அவர் ஊழியத்தில் குறைபாடுகள், தவறுகள் காணப்படும் போது அதை பத்திரிக்கைகளில் எழுதுவதும், கூட்டங்களில் விமர்சிப்பதும், சபையில் பேசுவதுமான நடத்தைகளை தவிர்த்து, சம்பந்தப்பட்ட அந்த ஊழியருக்கே நேரடியாக அவைகளை சுட்டிக்காட்டி அவரை எச்சரிக்கலாம் அல்லவா?

**பதில்** : தவறுகள் என்பது இருவகைப்படும். ஒன்று ஒரு ஊழியக்காரன் தன் தனிப்பட்ட வாழ்க்கையில் செய்யும் தவறு ஆகும். மற்றொன்று ஊழியத்தின் பாதையில் செய்யும் தவறாகும். பொதுவாக ஒரு ஊழியக்காரன் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் யாருக்காவது தவறோ அல்லது தீங்கோ, அறிந்தோ அறியாமலோ விளைவித்திருக்கலாம். இது போன்ற தவறுகள் அவர்கள் இருவரோடு மட்டுமே சம்பந்தப்பட்டது. இருவருக்குள் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்தை பலர் அறிய விளம்பரம் செய்வது சரியான அணுகுமுறை கிடையாது. அதே வேளையில் ஒரு ஊழியக்காரனின் உபதேசமோ, தவறான ஊழியமுறையோ அநேகரைப் பாதிப்பதால், அங்கே ஜனங்கள் எச்சரிக்கப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள். உதாரணமாக உணவுப் பொருட்களை ஏராளமான தயாரித்து விநியோகம் செய்யும் ஒரு கம்பெனியின் ஒரு தயாரிப்பு பலருடைய ஆரோக்கியத்தைக் கெடுப்பதாக கண்டறியப்பட்டது. (உதாரணமாக பன்னாட்டு குளிர்பான நிறுவனங்களான பெப்சி, கோக்கோ கோலா தயாரிப்புகளைச் சேர்ந்த சுமார் பனிரெண்டு குளிர்பானங்களில் அளவுக்கு அதிகமாக பூச்சிக் கொல்லி மருந்து கலந்திருப்பதாக டெல்லி அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் அறிவித்ததை நீங்கள் பத்திரிக்கைகளில் படித்திருக்கலாம்). இப்பொழுது அதற்காக என்ன செய்யலாம்? ஒரு வேளை நாம் அந்த கம்பெனிக்கு சுட்டிக்காட்டலாம். அவர்கள் அதற்கு வருத்தம் தெரிவிப்பார்கள். ஆனால் அந்த தயாரிப்பு ஏற்கனவே ஏராளமாக வெளியே வந்து, மக்கள் வாங்கி அதை உபயோகித்து வருகிறார்களே. அதற்கு என்ன செய்வது? அவர்கள் அந்த தயாரிப்பு ஆபத்தான தன்மைக் குறித்து மக்களுக்குள் விழிப்புணர்வை உண்டாக்கி, அந்த தயாரிப்பை மக்கள் உபயோகிக்காது எச்சரிக்க வேண்டியதே தலைமையான கடமை. இதைத் தான் நமது அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் செய்தது. அவ்வாறு செய்யாவிட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமில்லாது, இதனால் இன்னும் அநேகர் பாதிக்கப்படவேண்டிய நிலையும் ஏற்படும். இங்கே ஒரு கம்பெனியின் பெயர் கெட்டுப்போகும், ஒரு ஊழியக்காரனின் ஊழியம் பாதிக்கப்படும் என்பதைவிட ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவதே தவிர்க்கப்படவேண்டும் என்பதே முக்கியம்.

52. பாலம் ஒன்று இடிந்துவிழும் அபாயத்தில் இருப்பதைக் கண்டால், முதலில் மக்கள் தான் எச்சரிக்கப்பட வேண்டும். பாலத்தைக் கட்டியவரை கடிந்துகொள்வதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அதனால் எந்த நன்மையும் ஏற்படாது. மக்களை எச்சரிக்கும் போது ஆபத்திலிருந்து மக்கள் தப்பித்துக் கொள்வார்கள். அதுபோல் தவறான உபதேசங்களும், மக்களை ஏமாற்றும் தந்திரமான ஊழியத் திட்டங்களும் மக்கள் மத்தியில் வந்துவிட்டால், உடனே விசுவாசிகளை எச்சரிக்க வேண்டியது ஒரு உண்மையான ஊழியக்காரனுடைய கடமை. முதலில் விசுவாசிகள் எச்சரிக்கப்பட வேண்டும். அத்துடன் அந்த ஊழியக்காரனும் எச்சரிக்கப்பட வேண்டும்.

53. பல ஆண்டுகளுக்கு முன்பு எனது ஊழியத்தின் பாதையில் நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவு வருகிறது. மும்பை பட்டினத்தில், நான் முலுண்டு என்ற இடத்தில் வசித்து வந்தேன். ஆனால் தமிழர்கள் அதிகமாக வாழும் தாராவி என்ற இடத்தில் சில கிறிஸ்துவ திருத்துவக் கொள்கையுடைய தமிழ்

சபைகள் உண்டு. ஒரு சபை, அதன் மைதானத்தில் ஒரு வெளிநாட்டினரைக் கொண்டு சில நாட்கள் ஊழியம் ஏற்பாடு செய்திருந்தது. அந்த வெளிநாட்டு ஊழியக்காரர் தன் முதல் நாள் கூட்டத்தில் அப்.2:38ன் படி இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் என்று கூறுவதை தமிழில் மொழிபெயர்த்த நெல்லை ஜெபராஜ் என்ற ஊழியர் பிதா குமாரன் பரிசுத்தஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் என்று மொழிபெயர்த்தார். இதை மும்பையில் என்னுடன் ஐக்கியத்திலுள்ள சில விசுவாச சகோதரர்கள் கேட்க பின் இதை என்னிடம் வந்து கூறினார்கள்.

54. இதை உறுதிப்படுத்த நான் இரண்டாவது நாள் அந்த கூட்டத்திற்குச் சென்றேன். அன்றும் அந்த வெளிநாட்டு ஊழியக்காரன் நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று அப்.2:38யை கொண்டு பிரசங்கம் செய்ய, மொழிபெயர்ப்பாளராகிய நெல்லை ஜெபராஜ் என்பவர் நீங்கள் பிதா குமாரன் பரிசுத்தஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என மொழிபெயர்த்தார். அந்த நாள் கூட்டத்தில் ஒரு முறை, இரு முறை அவ்வண்ணமாகவே மொழிபெயர்ப்பு செய்ய, அதை அந்த மொழிபெயர்ப்பாளர் வேண்டுமென்றே தவறாக மொழிபெயர்ப்பு செய்கிறார் என்று நான் ஆவியில் உணர்ந்ததினால் மூன்றாம் முறை அவர் அவ்வண்ணமாகவே மொழிபெயர்ப்பு செய்ய, நான் ஜனங்கள் மத்தியில் எழுந்துநின்று, மொழிபெயர்ப்பாளரே உங்கள் மொழிபெயர்ப்பு சரியில்லை ஆதலால் அதை நிறுத்துங்கள் என்று ஆவேசமாக கூற, கூட்டத்தில் கலகலப்பு ஏற்பட்டது. மக்கள் மத்தியில் தவறான மொழிபெயர்ப்பு குறித்து ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. (உதாரணமாக W.B.G.N.S.ன் தவறான மொழிபெயர்ப்புகளை அவ்வப்போது செய்தித் தொகுப்புகளில் விமர்சிக்கப்பட்டு வருவதால் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை நான் காண்கிறேன். ஏனென்றால் அநேகர் என்னிடம் மொழிபெயர்ப்பு செய்தியை தாறுமாறாக்குகிறது எனக் குறை கூறுகின்றனர்).

55. கூட்டம் பாதிக்கப்பட்டவுடனே கூட்ட அமைப்பாளர்கள் என்னை இழுத்துக்கொண்டு நெல்லை ஜெபராஜ் முன் கொண்டுசென்றார்கள். அவர் என்னை யார் என்று விசாரிக்க, நான் பதில் கூற, நீ ஒரு ஊழியக்காரனாக இருந்துகொண்டு கூட்டத்தில் இப்படி கலகத்தை உண்டுபண்ணலாமா? நீ கூட்டம் முடிந்தவுடன் தனிப்பட்ட முறையில் என்னிடம் வந்து அவைகளை கூற வேண்டுமே என்று வாதிக்க, நானோ உன் தவறான மொழிபெயர்ப்பை கேட்டு எத்தனை ஜனங்கள் உபதேசத்துக்கடுத்தக் காரியத்தில் வஞ்சிக்கப்பட்டார்கள். ஏனென்றால் இந்த தவறை நீங்கள் வேண்டுமென்றே செய்தீர்கள். நான் ஜனங்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினதால் உன் தவறான மொழிபெயர்ப்பைக் கேட்டு அநேக ஜனங்கள் காரியம் இப்படியிருக்கிறதா என்ற அறிவை அடைந்தனர். மற்றபடி அவர்கள் தவறான பாதையில் சென்றிருப்பார்கள் என்று வாதாடினேன். பாருங்கள், அந்த ஊழியக்காரனுடைய தவறை நான் கூட்டம் முடிந்தவுடன் அவரிடம் மட்டும் சென்று எடுத்துக் கூறியிருப்பேனாகில், அதினால் அந்த தவறான மொழிபெயர்ப்பைக் கேட்ட எத்தனையோ ஆத்துமாக்கள் வஞ்சிக்கப்பட்டிருப்பார்கள். நான் கூட்டத்தின் மத்தியில் எழுந்து தவறான மொழிபெயர்ப்பை கூறினதினால் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணாச்சி ஏற்பட்டு மக்கள் காரியம் இப்படியாயிருக்கிறது என்று புரிந்துகொள்ள நேரிட்டது.

56. முடிவில் என்னை ஓரம்கட்டி, கூட்டம் முடிந்தவுடன் அடிக்க திட்டமிட்டனர். ஆனால் கர்த்தர் என்னை அற்புதப்பிரகாரமாக அவர்கள் கைக்கு தப்புவித்தார். எப்படியெனில் கூட்டம் நடந்த மைதானம் அருகில் ஒரு காலத்தில் என்னுடன் பணிபுரிந்த ஒரு நண்பர் அங்கு கடைவைத்திருந்தார். அவர் அந்த இடத்தில் பிரபலமானவர். அவர் இதைக் கேட்டவுடன் யார் என்னை அடிக்கயிருப்பது பார்க்கலாம் என சவால்விட்டு கூறியதால் நெல்லை ஜெபராஜ் மற்றும் அவரது கூட்டத்தினர் யாரும் என் மீது கை வைக்கவில்லை.

57. ஆக இங்கு முதலில் ஊழியர்களை கண்டிப்பதைவிட அவர்கள் தவறைக் குறித்து ஜனங்கள் மத்தியில் விழிப்புணர்வு கொண்டு வருவதே சாலச்சிறந்ததாகும்.

58. மேலும் இந்நாட்களில் நடைமுறையில் பொதுவாக, பெரும்பாலும் எந்த ஊழியனும் தன் தவறை ஒத்துக்கொள்வதில்லை. ஒருவேளை தனிப்பட்ட முறையில் ஒத்துக்கொண்டாலும், தாங்கள் தவறாக செயல்பட்டுவிட்டதாகவோ, தப்பிதமாக போதித்து வந்ததாகவோ வெளியரங்கமாக ஒப்புக்கொள்ள ஜனங்கள்முன்பு வருவதில்லை. ஆதலால் இந்த வகையான வாதம் நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்றாகவே இருக்கிறது. **பொதுவாக கிறிஸ்து பிரன்காம் உபதேசத்தில் உள்ளவர்களுக்கும், 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது, இனி ஞானஸ்நானம் தேவையில்லை, கர்த்தருடைய இராப்போஜனம் தேவையில்லை, சபை கூடுதல் தேவையில்லை என்பவர்களுக்கெல்லாம் அவர்களுடைய உபதேசம் தவறு என்பது நன்றாகத் தெரியும். ஆனாலும் ஜனங்கள் முகத்தில் காரி துப்புவார்களே என்ற பயத்தினால்தானே பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் தான் என்று சாதித்துக்கொண்டிருக்கிறார்கள்.**

59. பாருங்கள், எரேமியா உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள், அவர்கள் உங்களை வீண் பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கையல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று ஜனங்களை எச்சரித்தான். ஏரே.23:15,16. தவறானவைகளைக் குறித்த விழிப்புணர்வை மக்கள் முன் கொண்டுவருவது ஊழியத்தின் முக்கியமான அம்சமாகும். எனவே தான் இயேசுவும் தன்னுடைய சீஷர்களிடம் பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார். மத்.16:6.

60. பாருங்கள், தவறான மொழிபெயர்பைக் குறித்து அடிக்கடி எனது செய்தித் தொகுப்புகளில் எழுதிவருகிறேன். அது செவிடன் காதில் சங்கு ஊதின கதையாகத்தான் வி.பி.நற்செய்தி சொசைட்டிக்கு இருக்கிறது. சமீப நாட்களில் இதில் பிரதான பங்கு வகித்துவரும் ஏல்பெத்தேல் சபை பாஸ்டர் P.M.A.சாமியுடன் பேசிக்கொண்டிருக்கையில் அவர் தவறு நடப்பது சகஜம் தான். அதை முற்றிலுமாக நிறுத்தமுடியாது என வாதாடினார். நானோ தவறு நடக்கும் என கூறாதீர்கள், தவறு நடக்கக் கூடாதபடிக்கு கவனம் செலுத்துகிறோம், முயற்சித்து வருகிறோம் எனக் கூறுங்கள், அதற்கு மாறாக தவறு நடக்கத்தான் செய்யும் என்றால் அது முறையாகாது என வாதாடினேன். நான் சகோ.எட்பிஸ்கல் மற்றும் சகோ.அந்தோணி அப்பா குறித்து எழுதுவதை அவர் விரும்பவில்லை. அடுத்து வெளி.19:10 மற்றும் 22:8,9ல் கூறப்பட்டுள்ள தூதன் சகோ.வி.ம.பிரன்காம் என்றும் அவர் வாதாட நான் அதை மறுக்க,

இனி நான் அவருடன் ஐக்கியம் வைக்கத் தேவையில்லை என்று கூறிவிட்டார். நானும் அதற்காக கவலைப்பட்டதில்லை.

61. தவறான மொழிபெயர்ப்பு குறித்து தீர்க்கதரிசி: இவர்கள் இக்காலத்து செய்திக்கு தங்கள் சொந்த மொழிபெயர்ப்புகளையும், வியாக்கியானங்களையும், கருத்துக்களையும் கொடுத்து நம்மை ஒரு குழப்பத்திற்குள்ளாக்குகிறார்கள் என்று கூறுகிறார். They put their own translation or interpretation or their own idea to the message and we get in a mess. ஆக பாஸ்டர் சாமி சபையை குழப்பத்துக்குள்ளாகவே வழிநடத்த விரும்புகிறார் என அறிந்துகொண்டேன்.

62. **கேள்வி : 5**
ஒரு ஊழியன் தவறாகச் செயல்படும் போது மற்றொரு ஊழியன் ஏன் அவனை குற்றஞ்சாட்ட வேண்டும்? ஒரு ஊழியக்காரனை நியாந்தீர்க்க மற்றொரு ஊழியக்காரனுக்கு என்ன உரிமை? தவறு செய்யும் ஊழியக்காரன் தேவனுக்குத் தானே கணக்கு ஒப்புவிக்க வேண்டும்?

**பதில்** : ஒரு உண்மையான ஊழியக்காரன் ஜனங்களை சரியான சத்தியத்திலிருந்து விலகிப்போகத் தூண்டும் தவறான காரியங்களைக் குறித்து எச்சரிக்க கடமைப்பட்டிருக்கிறான். தாவீதின் தவறை தேவன் அவனுக்கு நேரிடையாக உணர்த்தாமல், நாத்தான் மூலம் உணர்த்தினார். ஆகாபின் பாவங்களை தேவன் நேரடியாகக் கண்டிக்காமல் எலியா வாயிலாகக் கண்டித்தார். ஒரு ஊழியக்காரன் வேதத்தை புரட்டும் போது, ஜனங்களை தவறான வழியில் நடத்தும் போதும், சுயநலத்துக்காக தவறான முறைகளை கையாளும் போதும், அதைக் குறித்து தேவன் தாம் தெரிந்துகொண்ட பாத்திரத்துக்கு அதை வெளிப்படுத்தி, அந்தத் தவறை கண்டிக்கும்படி அவனை உபயோகப்படுத்துகிறார். சவுல் தவறு செய்யும் போது தேவன் அதை சாமுவேலுக்கு வெளிப்படுத்தி அவனைக் கண்டித்தார். ஒரு ஊழியக்காரனுடைய ஊழியத்திலுள்ள தவறுகளை, மற்றொரு ஊழியக்காரன் கண்டித்தால், அவன் தன் சொந்த உணர்வுகளால் அவ்விதம் தூண்டப்பட்டு செய்கிறான் என எண்ணுவது தவறு. தேவன் அவனை உபயோகித்து அந்த தவறை கண்டிக்கிறார் என ஆவிக்குரியவர்கள் அறிந்துகொள்வார்கள்.

63. சத்தியத்துக்கு எதிரான காரியங்களை விமர்சிப்பது நியாயந்தீர்க்கும் செயல் என்பது தவறாகும். கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றும், அவர்களின் புறத்தோற்றத்தைக் கண்டு ஏமாறாமல், அவர்கள் கனிகளினால் அவர்களை அறிந்துகொள்ளுங்கள் என இயேசு கூறுகிறார். மத்.7:14-20. எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தபின் தான் எச்சரிக்கையாயயிருக்க முடியும். எபேசு சபையினர் அப்படிச் செய்ததினால் தான் அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலர் என்று சொல்லுகிறதை சோதித்து அவர்களை பொய்யர் என்று கண்டறிந்தார்கள். வெளி.2:2. பாருங்கள் எல்லா ஆவிகளையும் நம்பிவிடாமல், அவைகள் தேவனால் உண்டானவைகளா என்று சோதித்து அறியுங்கள் என்று நாம் உபதேசிக்கப்பட்டுள்ளோம். 1யோ.4:1.

64. ஒன்றை சோதித்துப் பார்க்கும் போதுதான், ஒன்றை ஆராய்ந்து பார்க்கும் போதுதான், அது நல்லதா கெட்டதா என்று அறிந்துகொள்ள முடியும். அதை தவறு என்று கண்டால், அதை நியாயந்தீர்த்தல் என்று எப்படி கூறமுடியும்? அன்று இயேசு மதத்தலைவர்களின் பலமுறைகேடான ஆவிக்குரிய நடவடிக்கைகளைக் கண்டு, அதை வெளியரங்கமாகக் கண்டித்தார். அன்று அவர் செய்த வேலையைத் தான் இன்று அவர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்திக்காக ஏற்படுத்தின ஐந்துவகை ஊழியக்காரர்களும் செய்கிறார்கள்.

65. தவறான ஊழியங்களும், தவறான உபதேசங்களும் புளித்தமாவு ஆகும். அதை இனங்கண்டு விமர்சிக்கப்படாவிட்டால், மக்கள் எச்சரிக்கப்படாவிட்டால் அது வேகமாகப் பரவும். ஒருவனின் தவறான உபதேசம் அநேகரால் நாளடைவில் பின்பற்றப்படுகிற முன்மாதிரியாக மாறிவிடுகின்றன. ஒருவன் செய்கின்ற ஒரு காரியம் வேதத்தின் வெளிச்சத்திற்கு தகாததாகவோ, சத்தியத்திற்கு முரணானதாகவோ கண்டறியப்படும் போது, அதனை வெளியரங்கமாக கண்டிக்காவிட்டால், அவரும் அதனை திருத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படாது. மற்றவருக்கும் அது தவறானது என்று கண்டுகொள்ள முடியாது. மும்பை அந்நிய அக்கினிஸ்தம்பம், தொல்லை தந்த தொலைக்காட்சி பகிரங்கமாகக் கண்டிக்கப்பட்ட போது அந்த ஊழியர் தன்னைத் திருத்திக் கொண்டதாக இந்நாட்களில் நான் கேள்விப்பட்டு கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

66. சரி எது, தவறு எது என்பதை பகுத்தறியும் வாய்ப்பை பெற்றவர்கள் அவைகளைக் குறித்து கவலைப்படாமல் சாதாரணமாகயிருந்தால், அது சத்தியத்தின் விஷயத்தில் ஒரு மரத்துக்போன அனுபவமாகும். தேவனைக் குறித்தும், தேவனுடைய வார்த்தையைக் குறித்தும் உண்மையாகவே ஒருவனுக்கு வைராக்கியம் இருந்தால், அவன் தேவனுக்கு உகந்ததல்லாதவைகளையும், வார்த்தைக்கு முரண்படுகிறவைகளையும் காணும் போது அமைதலாக வாய் மூடிக்கொண்டு இருக்கமுடியாது. எல்லாவற்றையும் கர்த்தரே பார்த்துக்கொள்வார் என்றால், ஊழியக்காரர்கள் எதற்கு? கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்கென்றே கர்த்தர் அவனை ஏற்படுத்தியிருக்கிறார் அல்லவா? ஏன் அந்த பணியை அவரே செய்யவில்லை? நன்மை தீமைகளை சுட்டிக்காட்டினால் தானே சபை பக்திவிருத்தியடைய முடியும்?

67. ஒரு தொழில் ஸ்தாபனத்தை கண்காணிப்பு செய்ய ஒருவர் வேலையில் நியமிக்கப்பட்டால், சிலர் சரியாக செயல்படாதபோது, அதை கண்டுகொண்டு நமக்கு ஏன் இந்த வம்பு முதலாளி அதைப் பார்த்துக்கொள்வார் என்று சும்மாயிருந்தால் அந்த கண்காணிப்பாளனை முதலாளி மெச்சிக்கொள்வாரா? அவனுடைய உக்கிராணப் பொறுப்பை மற்றவனுக்குக் கொடுப்பார் அல்லவா!

68. **கேள்வி : 6**
ஊழியக்காரர்களும் மனிதர்கள் தானே, அவர்களிடம் உள்ள தவறுகள், குறைபாடுகளை பெரிதுபடுத்தி விளம்பரப்படுத்துவது அவர்கள் மேல் மக்கள் வைத்திருக்கும் நல்லெண்ணத்தைப் பாதிக்குமல்லவா?

**பதில்** : ஒருவன் எவ்வளவு பெரிய ஊழியக்காரனாயிருந்தாலும் அவனும் முற்றிலுமாக மனுஷீகத்திற்கு அப்பாற்பட்டவன் அல்ல. குறைகள், தவறுகள்; நன்கு அறியப்பட்ட, அறியப்படாத

ஊழியர்கள் அனைவரிடத்திலும் காணப்படக்கூடிய ஒன்றாகும். மாம்சம் பலவீனம் உள்ளதுதான். ஆபிரகாம், யாக்கோபு, மோசே, தாவீது, பேதுரு, பவுல், பிரன்காம் போன்ற பிரபலமான ஊழியக்காரர்கள், தேவமனிதர்கள் வாழ்க்கைகளில் எல்லாம் தவறுகள் நிகழ்ந்தன. அதே வேளையில் தவறை தவறு என்றும், குறையை குறை என்றும் அவர்கள் உணர்ந்துகொள்ளும் வாய்ப்புகள் தரப்படும் போது அவர்கள் அதை சரிசெய்து கொண்டார்கள். ஆம், ஒரு உண்மையான ஊழியக்காரன் அப்படியே செய்வான். தொலைக்காட்சி முன் இருந்து கொண்டு ஆராதணை நடத்தாதே என்று கூறினால், உடனே அதை உண்மையான ஊழியக்காரன் திருத்திக்கொள்வான். இடும்பன், இவன் சொல்ல நான் என்ன கேட்கிறதா என்பான். தவறு, குறைகளை தங்கள் வாழ்க்கை முறையாக்கி கொள்வதும், நியாயப்படுத்துவதும் அவைகளிலே தொடர்ந்து வழிநடப்பதும் அவைகள் சரியென்று காட்டுவதற்காக வேத வசனங்களை முறைகேடாக உபயோகிப்பதும் பாஸ்டர் ஜான் சாமுவேல், அவரது சீடன் பாஸ்டர் ரவீந்தரராஜ் விதிவிலக்கல்ல. பெண்கள் தங்கள் தலையை, தங்கள் சேலை முந்தாணையால் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்பதற்கு செய்தியிலிருந்து, தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆதாரங்கள் இவர்கள் காட்டுவது ஒரு வேதப்புரட்டுச் செயலாகும். இது ஒரு மனுஷனுடைய பெலவீனத்தின் விளைவு அல்ல. மாறாக அது அவர்களது மனக்கடினத்தின், இருதயக்கடினத்தின், வணங்காகழுத்தின் விளைவாகும். எனவே அவர்கள் கண்டிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

69. பொருளாசையினாலும், நேர்மையற்ற ஆசைகளினாலும் ஊழியக்காரர்கள் உந்தப்பட்டு சத்தியத்திற்கு புறம்பான காரியங்களை செய்யும் போது, பேசும் போது ஜனங்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கான தகுதிகளை இழந்துவிடுகிறார்கள். கர்த்தருடைய மேன்மையான சத்தியங்களை காலில் போட்டு மிதிப்பது போன்று செயல்படுகிறார்கள். தவறுசெய்த ஒருவன் மக்களிடமிருந்து பெறும் நல்லெண்ணமும், புகழும், மரியாதையும் பாதிக்கப்படக் கூடாது என நினைப்பது கர்த்தருடைய வார்த்தையைவிட ஒருவனுடைய தனிப்பட்ட மதிப்பை பெரிதாக நினைப்பதாகும். தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாக விரும்பக்கூடாது.

70. கடிந்துகொள்ளுதலுக்கு ஒருவன் திரும்பம் போது கர்த்தர் என் ஆவியை உனக்கு அருளுவேன், என் வார்த்தைகளை உனக்கு தெரிவிப்பேன் என்கிறார். நீதி.1:23. ஆதலால் கடிந்துகொள்ளுதலை ஒருவன் வெறுக்கக்கூடாது, அசட்டைப்பண்ணக்கூடாது. அப்படிச் செய்தால் அவன் தன் வழியின் பலனைப் புசிப்பான்.

1) இயேசு பேதுருவைக் கடிந்துகொண்டார். மாற்.8:33.
2) இயேசு சீஷருடைய அவிசுவாசத்தையும், இருதய கடினத்தையம் கடிந்துகொண்டார். மாற்.16:14.
3) பரிசுத்தஆவி வந்து பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். யோ.16:8.
4) ஞானமாய் கடிந்துகொண்டு புத்தி சொல்கிறவன் பொற்கடுக்கனுக்கும், அபரஞ்சிப்பூசனத்திற்கும் சரி. நீதி.25:12.
5) பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும். நீதி.29:15.
6) புத்திமானைக் கடிந்துகொண்டால் அவன் அறிவுள்ளவனாவான். நீதி.19:25.
7) கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவன் ஞானம் அடைவான். நீதி.15:32.
8) ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவன் விவேகி. நீதி.15:5.

71. **கேள்வி : 7**

பிற ஊழியங்களையும், பிற ஊழியர்களையும் குற்றப்படுத்துவது, விமர்சிப்பது குறைகூறும் ஆவி என்று சொல்லப்படுகிறதே, அது சரியா?

**பதில்** : இது பொதுவாக தவறு செய்யும் ஊழியர்கள் தங்களை யாரும் குற்றப்படுத்தக் கூடாது என்பதற்காக கூறுகின்ற ஒரு மாய்மால உபதேசமாகும். இதற்குச் சாதகமாக அவர்கள் தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? ரோ.8:33, இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழதள்ளப்பட்டுப் போனான். வெளி.12:10 போன்ற வசனங்களை எடுத்து உபயோகிப்பார்கள். இவர்கள் தங்களின் மாய்மாலங்களை யாராவது வெளிப்படுத்தும் போது, ஜனங்கள் அதனை பெரிதாக எண்ணாமல் அவ்விதம் கூறுகின்றவர்களை பாவிகளைப் போல பார்க்கச் செய்வதற்காக உபயோகிக்கும் தந்திரமான வார்த்தைகளே இவை. இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு செயலையும் வாயின் வார்த்தைகளையும் அக்காலத்து பரிசேயர், சதுசேயர்கள் மிக உன்னிப்பாக கவனித்து, அவருடைய பேச்சில் ஏதாவது ஒரு விதத்தில் அவரைக் குற்றப்படுத்த வாய்ப்பு கிடைக்காதா என்று சுற்றி வந்தார்கள். இது தான் குறை கூறும் ஆவியின் செயல். ஏனென்றால் அவர்களுக்குள் இருந்த ஆவி குறைகளைத் தேடி அலைய அவர்களைத் தூண்டியது. ஆனால் இயேசு கிறிஸ்து சதுசேயர்களையும், பரிசேயர்களையும் வேதபாரகர்களையும் பல நிலைகளில் கடுமையாகக் குறைகூறவும், குற்றஞ்சாட்டவும் செய்தார். ஆனால் அது குறைகூறும் ஆவியினால் அல்ல. அவர் அங்கே கர்த்தருடைய நியமங்களுக்கெதிராக, வேதத்திற்கு அடுத்த காரியங்களில் குறைகளையும், குற்றங்களையும் கண்டார். ஜனங்களுக்கு அவர்களைக் குறித்து எச்சரிக்க வேண்டிய தேவையை உணர்ந்தார். அவைகளைக் குறித்து எதுவும் பேசாமல் இருப்பது அவர்களின் மாய்மாலங்களை அங்கீகரிக்கும் செயலாகிவிடும் என அவர் அறிந்து, அவர்களை திறந்த வெளியில் கண்டித்தார். பாருங்கள் ஆடுகளை மேய்க்கிறவன் ஓநாயின் வேடங்களைக் கண்டும் காணாதது போல் இருக்க முடியாதே!

72. தேவனுடைய நியமங்களுக்கு முரண்பாடாகவும், அவருடைய வேதத்திற்கு எதிராகவும் சொல்லப்படும் தவறான செயல்களைச் சுட்டிக்காட்டுவதும், கண்டிப்பதும் தவறான ஆவியின் விளைவு என்றால் பழையஏற்பாடு தீர்க்கதரிசிகளையும், புதிய ஏற்பாட்டில் யோவான் ஸ்நானன், இயேசு, பவுல், யாக்கோபு, யோவான் போன்றவர்களையும் இவர்கள் குற்றஞ்சாட்டுபவர்களாகவே பொருள்கொள்ள முடியும். ஏனென்றால் அவர்களும் தேவனுடைய வார்த்தைக்கு இசைந்துபோகாத எந்த செயல்களையும் வெளியரங்கமாக எதிர்த்தார்களே! கண்டித்தார்களே! கடுமையான குரலில் விமர்சித்தார்களே. குறைகளையும், தவறுகளையும் சுட்டிக்காட்டுவது தவறு என்றால் இவர்கள் செய்தது யாவும் தவறுதானா? அவர்களிடமும் குற்றஞ்சாட்டும் ஆவிதான் கிரியை செய்ததா?

73. ஒரு ஊழியக்காரனின் ஊழியநடவடிக்கைகளில் மாய்மாலத்தின் ஆவியும், ஜனங்களை வஞ்சிக்கும் ஆவியும், பொருளாசையின் ஆவியும், ஆடம்பரவாழ்க்கையின் ஆவியும், அதிகமாக கிரியை செய்யும்

போது உண்மையான ஊழியக்காரர்கள் பரிசுத்தஆவியினால் ஏவப்பட்டு அவைகளை பகிரங்கமாகக் கடிந்துகொள்வார்கள்.

74. **கேள்வி : 8**
சில ஊழியங்களின் மூலம் பலர் பலவிதங்களில் பயன் பெறுவதால் அந்த ஊழியத்திலுள்ள சில தவறுகளை ஏன் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது?

**பதில்** : ஆம், சில ஊழியர்கள் அடிக்கும் கொள்ளையின் மூலம் பல சமூக சேவைகள் நடைபெறுகின்றன. சில ஊழியர்கள் தங்கள் கொள்ளையின் மூலம் அவர்களுக்கு வால்பிடிக்கும் சிலரை பொருளாதார உதவிகள் மூலம் தாங்குகின்றனர். இதனால் அவர்களிடம் காணப்படும் தவறுகளை சாதாரணமாக எடுத்துக்கொள்வது தேவனுடைய நீதியாயிராது.

75. ஒருவர் நேர்மையற்ற முறையில் பல பொய்களைக் கூறியும், பலரை ஏமாற்றியும் மிகுதியாக சம்பாதிக்கிறார். இதனால் பலருக்கு பலஉதவிகள் செய்கின்றனர். ஆனாலும் இந்த நல்ல விஷயங்களை மெச்சிக்கொண்டு, அவரது நேர்மையற்ற பண சம்பாத்தியத்தையும், தொழிலுள்ள பித்தலாட்டத்தையும் சாதாரணமாக எடுத்துக்கொள்வது நியாயமாயிருக்குமா? அடிப்படையே சரியில்லாத போது பிற நன்மைகளைப் பார்த்து மெச்சிக்கொண்டிருப்பது உண்மையான கிறிஸ்தவனுக்கு அழகல்ல. விசுவாசி எனக் கூறிக்கொண்டு பீடிக்கம்பெனி நடத்துகின்றனர், மதுபானம் விற்பனை செய்கின்றனர், லாட்டரிச்சீட்டு வாங்குகின்றனர் விற்கின்றனர். கம்பெனியில் வேலை செய்கிறவர்களுக்கு ரூ.2000/- சம்பளம் கொடுத்துவிட்டு ரூ.5000/-க்கு ரசீது பெற்றுக்கொள்ளுகிறார்கள். அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தை தாராளமாக சபைக்கு கொடுத்து உதவுகின்றனர். ஆதலால் பாஸ்டர் அந்த தொழிலை கண்டிப்பதில்லை. அதே வேளையில் மற்ற ஊழியக்காரர்கள் அதை கண்டியாமலிருக்க முடியுமா? அந்த உதவிகளினால் ஜெபவீடுகளையும் தங்களுக்கு பங்களாக்களையும் கட்டும் பாஸ்டர்கள் சும்மாயிருக்க முடியும். கள்ள கபடமுள்ள வேலையாட்கள் சும்மாயிருக்க முடியும். ஆனால் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரன் மௌனமாயிருக்க முடியாது.

76. **கேள்வி : 9**
ஒரு ஊழியக்காரன் தவறு செய்தால், அவனுடைய பெயரை பத்திரிக்கைகளில் எழுதி விளம்பரப்படுத்தி விமர்சிப்பது சரியா?

**பதில்** : இதை விசேஷமாக, ஒரு லோக்கல் சபையில் டீக்கன் ஸ்தானத்திலிருந்து விலகி தனக்குத்தானே உயர்பதவி கொடுத்து, ஒரு சபை ஆரம்பித்து தன்னைத்தானே பாஸ்டராக்கிக்கொண்டு, சில ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி, இரு எஜமான்களுக்கு (சாத்தானுக்கும் தேவனுக்கும்) ஊழியம் செய்துவரும் சென்னை, கடப்பேரி சகோ.காபிரியேல் பக்தசிங் அவர்களுக்காக இதை எழுதுகிறேன். பொதுவாகக் கள்ள கபடமுள்ள வேலையாட்கள் தங்கள் பெயர் பத்திரிக்கைகளில் வந்து விமர்சிக்கப்படுவதை விரும்புவதில்லை. ஏனென்றால் அவர்களுடைய தவறுகள் வெளியரங்கமாகி, தங்களுக்கு இருந்த செல்வாக்கு, தங்கள் சம்பாத்தியமும் குறைந்துவிடுமே என்ற பயத்தினால் அவர்கள் முறுமுறுப்பார்கள். இதற்கு நிச்சயமாக வேதத்தில் ஆதாரங்கள் உண்டு. பாருங்கள், கள்ளப் போதகர்களான இமெநேயு, பிலேத்து குறித்து அவர்கள் அவபக்தியுள்ளவர்கள் என்றும், அவர்கள் சத்தியத்தைவிட்டு விலகிவிட்டார்கள் என்றும், உயிர்தெழுதல் நடந்துவிட்டது எனக் கூறி சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள் எனவும் பவுல், தீமோத்தேயுக்கு எழுதுகிறான். 2தீமோ.2:16-18. இன்று புதுக்கோட்டை சகோ.ஜெயராஜ் இந்த வண்ணமாகத்தானே சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார். அவருடைய பெயரை எழுதுவதால் அவருக்கும் கோபம் வருகிறது. அன்று நிச்சயமாக இமெநேயுவுக்கும், பிலேத்துவுக்கும் கோபம் வந்திருக்கும். ஆனால் அதைக் குறித்து பவுல் பொருட்படுத்தியிருக்கமாட்டான். ஏனென்றால் அவன் பணியை அவன் செய்தான். அவ்வண்ணமாகவே இன்றும் பலர் என் மீது கோபப்படுகிறார்கள். அவனை அடிப்பேன், உதைப்பேன், கொலை செய்வேன் என்று மிரட்டுகிறார்கள். அவர்கள் கனிகளை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் கர்த்தர் எனக்குக் கொடுத்த பணியை நான் செய்தாக வேண்டும்.

77. இவர்கள் ஏன் என்னைப் பகைக்கிறார்கள்? இவர்கள் கிரியைகள் பொல்லாதவைகளாயிருப்பதினால். இவர்கள் இன்னும் சத்திய ஆவியானவரைக் காணாமலும், அறியாமலும் இருக்கிறதினால் இவர்கள் கிரியைகள் பொல்லாங்கானதாயிருக்கிறது. யோ.7:7. உலகம் தன்னுடையதை சிநேகிக்கும். யோ.15:19. ஆதலால் தான் சகோ.ஜான்சாமுவேல் சகோ.ரவீந்திரராஜை நேசிக்கிறார். சகோ.எட்வர்ட் சகோ.ஜிஞ்ஜி தேவராஜையும் சகோ.ரவிசந்திரனையும் நேசிக்கிறார். புதுக்கோட்டை சகோ.ஜெயராஜ் திருச்சி சகோ.ரூபனையும், சகோ.ஜோசப்பையும் நேசிக்கிறார். ஆனால் நானோ இவர்கள் அனைவரையும் நேசிக்கிறேன். மார்க்கத்தினின்று தப்பிப்போன, சத்தியத்தை விட்டு விலகிப்போன இவர்கள் ஆத்துமா மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் வாஞ்சையும், என் ஜெபமும்.

78. அடுத்து பவுல், மேலும் தீமோத்தேயுக்கு எழுதும் போது (1தீமோ.1:18-20) நீ விசுவாசமும் நல்மனசாட்சியும் உடையவனாயிரு. இந்த நல்மனசாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினார்கள். இமெனேயும், அலெக்ஸாந்தரும் அப்படிப்பட்டவர்கள். அவர்கள் சிட்சிக்கப்பட அவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன் என்கிறான். இந்த அலெக்ஸாந்தைக் குறித்து பவுல் மேலும் எழுதும்போது (2தீமோ.4:14) அவன் எனக்கு வெகுதீமை செய்தான், அவனுடைய செய்கைக்குத் தக்கதாகக் கர்த்தர் அவனுக்கு பதிலளிப்பாராக என்கிறான். அலெக்ஸாண்டர், மாற்.15:21ல் கூறப்பட்டுள்ள சீமோன் என்பவனின் மகன். இவனைக் குறித்து அப்.4:6, 19:33ல் கூட வாசிக்கலாம். இந்த இமெநேயும் (2தீமோ.2:17) இமெனேயும் (1தீமோ.1:20) ஒருவராகத் தெரிகிறது. ஏனென்றால் ஆங்கிலத்தில் இவர்கள் பெயர் இவ்வண்ணமாக **Hymenaeus** என்றே இரு இடத்திலும் உள்ளது. இவ்வண்ணமாகவே சென்னை, பல்லாவரம் சகோ.மோசஸ்பாபு, சகோ.பால்பன்னீர்செல்வம் போன்றவர்கள் எனக்கு வெகுதீமை செய்து வருகிறார்கள். என்னைப் பற்றி மிக்க அவதூறாகப் பேசி நான் சில சபைகளுக்குச் செல்லவிடாதபடிக்கு தடுத்து வருகிறார்கள். சபை பாஸ்டர்களை மிரட்டி, அவரை சபைக்குள் பிரசங்கபீடத்தில் அனுமதித்தால் கிளர்ச்சி செய்வோம் என்று மிரட்டுகிறார்கள். இவ்வாறாக இவர்கள் எனக்கு விரோதமாய் பொல்லாத வார்த்தைகளை அலப்பி செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்வேன். இவர்கள் இப்படிச் செய்துவருவதும் போதாமல், தான் சகோதரனாக ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறதுமன்றி, ஏற்றுக்கொள்ள

மனதாயிருப்பவர்களையும் தடைசெய்து, சபைக்கு புறம்பே தள்ளுகிறார்கள். விசுவாசத்தில் இன்னும் உறுதியில்லாத, விசுவாசக்குறையுள்ள ஒரு சகோதரனை நீ சகோ.காலேப் யோசுவாவுக்கு ஒற்றன். ஆதலால் சபைக்குள் வராதே எனக்கூறி அவனைப் புறம்பே தள்ளுகிறார்கள். இவர்கள் இருவரும் தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்றும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் கேட்டுக்கொள்கிறேன்.

79. மேலும் பவுல், தீமோத்தேயுக்கு எழுதும்போது அவன் உடன்வேலையாளாகிய தேமா (பிலேமோன்:24, கொலோ4:14) இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்து தன்னைவிட்டு பிரிந்துசென்றுவிட்டான் என எழுதுகிறான். 2தீமோ.4:10.

80. மேலும் பவுல், தீத்துக்கு எழுதும்போது கிரேத்தா (Crete), தீவு மக்கள் ஓயாப்பொய்யர் (Always liers), துஷ்டமிருகங்கள் (Evil beasts), பெருவயிற்றுச் சோம்பேறிகள் (Lazy gluttons) அவர்கள் விசுவாசத்திலே ஆரோக்கியமாயிருக்கும்படி கண்டிப்பாக கடிந்துகொள் என்று ஒரு தீவினரையே பெயர் குறிப்பிட்டு கடிந்துக் கொண்டு எழுதுகிறான். கிரேத்தா தீவார் என்றால் கிரேத்தா தீவில் உள்ள சபை (Church at Crete) ஆகும்.

81. பாருங்கள், சபைக்காலத்தில் தவறுசெய்கிறவர்கள் யாராக இருந்தாலும் தனிப்பட்ட மனிதனாகவோ அல்லது முழு சபையாராக இருந்தாலும் பெயர் குறிப்பிடப்பட்டு நமக்கு திருஷ்டாந்தமாக எழுதிவைக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாடு காலத்தில் கூட அநேக கள்ள தீர்க்கதரிசிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு கடிந்துகொள்ளப்படுகின்றன. உதாரணமாக சிதேக்கியா (1ராஜா.22:11), பிலேயாம் (எண்22:32), அனனியா (எரே.28:15) இவர்கள் உத்தமமானவர்கள், நல்லவர்கள். ஆனாலும் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்கள். இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம், உபதேசிக்கிறோம், போதிக்கிறோம் எனக்கூறும் அநேக ஊழியர்களுடன் அடிப்படை உபதேசத்தில் (ஒரே தேவன், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து; ஒரே ஞானஸ்நானம், அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால்) எனக்கு ஒருமனப்பாடு உண்டு. மோசேயும் பிலேயாமும் அடிப்படையில் உறுதியாயிருந்தார்கள். சிதேக்கியாவும் அடிப்படையில் சரியாகத்தான் இருந்தான். ஆனால் அவர்களுடைய போதனைகள் தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்துக்குரிய செய்திக்கும் முரணாக இருப்பதால், நான் அவர்களை எதிர்க்கிறேன். மோசே பெற்றிருந்த அதே அபிஷேகத்தை பிலேயாம் பெற்றிருந்தான். அப்படியானால் அவர்களிடையே காணப்பட்ட வேறுபாடு என்ன? அவர்கள் போதகமே!

82. பெயர் எழுதாதே, பெயர் எழுதாதே என்கிறார்கள். இது சாத்தான் தன் பெயருடன், தன் தீயகாரியங்கள் வெளிப்படுவதை விரும்பாததினால் இவ்வண்ணமாகக் கூறுகிறான். ஆனால் நானோ வேதவாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு பெயர்களை எழுதுகிறேன். ஒருவேளை அந்த நபர்களாலோ அல்லது அவர்களுக்கு நெருக்கமான நபர்களாலே எனக்கு எதுவும் தீங்கு ஏற்பட்டால் அதை கர்த்தர் பார்த்துக்கொள்வார். நான் அதைக் குறித்து கவலைப்படுவதில்லை. தீர்க்கதரிசியாகிய சிதேக்கியாவினால் தீர்க்கதரிசியாகிய மிகாயாவுக்கு தீங்கு ஏற்பட்டது. இந்த கள்ள கபடமுள்ள வேலையாட்களால் ஒரு கூட்டம் ஜனங்கள் தவறான பாதையில் வழிநடத்தப்படுகிறார்கள். இந்த ஜனங்களை எச்சரித்து அவர்களை அவர்கள் பாதையிலிருந்து அகற்ற வேண்டும். அவர்களைப் பீறிப்போடாதபடிக்குக் காத்துக்கொள்ள வேண்டும். அதுவே எனது பாடு. ஆனால் அந்தந்த சபைகளில் கிறிஸ்துவினுடைய மணவாட்டி இருப்பாளாகில் அவள் இந்த அறைகூவலுக்கு செவிக்கொடுத்து நிச்சயமாக வெளியே வந்து தன்னை வேறுபிரித்துக்கொள்வாள். ஏனென்றால் ஆதிகாலத்தில் சாத்தான் ஏவாளிடம் ஒரேயொரு வார்த்தைக்கு தவறான அர்த்தம் கூறினான். அவள் அதை விசவாசித்தாள், வஞ்சிக்கப்பட்டாள். ஆனால் ஆதாம் அல்ல. அதே போன்று இக்காலத்தில் தங்களை மணவாட்டி என்று அழைத்துகொள்பவர்களே பொய்யான வார்த்தை மீது, தவறான உபதேசங்களின் மீது விசுவாசம் கொண்டுள்ளார்கள். பாஸ்டரின் தவறான நடத்தைக்கு உடன் பங்காளிகளாயிருக்கிறார்கள். வஞ்சிக்கப்படுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டியல்ல.

83. பிரியமானவர்களே, பொதுவாக அது எந்த ஒரு காரியமாக இருந்தாலும் அது வேதாகமத்திலிருந்து வரவேண்டும். அது சரியா தவறா என்று வேதாகமம்தான் நிர்ணயிக்க வேண்டும். வேதாகமம் தவறு என்றால் அது தவறு தான். எந்தவொரு காரியமும் வேதாகமத்திலிருந்து அது சரி என நிரூபிக்கப்பட வேண்டும். அது ஓரித்தில் மட்டுமல்ல அது வேதாகமம் முழுவதும் சரியென நிரூபிக்கப்படவேண்டும். ஒரு காரியம் சரியென்றால் அது வேதாகமத்திலுள்ள அனைத்து வாக்கியங்களுடனும் இணைந்து செல்ல வேண்டும். ஒரு காரியம் அவ்வண்ணமாக வேதாகமத்தின் அனைத்து பகுதிகளுடனும் இணைந்து செல்லாவிட்டால் நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என தீர்க்கத்தரிசி கூறுகிறார். அவர் கூறுவதை ஆங்கிலத்தில் நீங்கள் இவ்வண்ணமாக வாசிக்கலாம். To me, everything that operates must come out of this Bible or it's not right. It has to come from Here. It's to be proved in the Bible not just one place, but it has to come all the way through the Bible. I've to belive it. It has to dove tail and tie together with every scripture or I don't believe it. (Foot prints on the sands of time. Page 69).

84. முடிவாக ஒரு ஊழியக்காரன் மற்றொரு ஊழியக்காரனுடைய ஊழியம், உபதேசம், போதகம், நடத்தை தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் மாறாக, புறம்பாக இருக்குமானால், அங்கு காணப்படும் தவறுகளையும் குறைகளையும் கண்டித்து, விமர்சித்து மக்களை ஒரு விழிப்புணர்ச்சிக்கு கொண்டுவருவது தேவனுடைய வார்த்தையின்படியும் இக்காலத்துக்குரிய செய்தியின்படியும் முற்றிலும் சரியானதே. இதில் எந்தவிதமான வாக்குவாதத்துக்கும் இடமில்லை. ஆக, ஒரு ஊழியக்காரன் மற்றொரு ஊழியக்காரனுடைய காரியங்களை, உபதேசங்களை தவறு எனக் கூறக்கூடாது, அந்த ஊழியக்காரனுடைய போதனைகளை கண்டிக்கக்கூடாது, கண்டுகொள்ளக்கூடாது; அவனுடைய ஊழியத்துக்கு அவனே பொறுப்பு, ஆதலால் அவன் தவறானவற்றை உபதேசிக்கிறான், போதிக்கிறான் என்று கூறி பிறனுடைய ஊழியத்தைக் கண்டுகொள்ளக்கூடாது என்பதெல்லாம் சத்துருவாகிய சாத்தானின் வேலையாகும். அவன் தன் காரியங்கள் அம்பலப்படுத்தப்பட்டுவிடக்கூடாது என்பதற்கு கையாலும் மாயமான தந்திரங்களாகும்.

85. பிரியமானவர்களே, கோவை சகோ.கே.ராஜாவுக்கும், சென்னை சகோ.ஜெ.தேவநேசனுக்கும் எனக்கும் ஊழியத்தின் பாதையில் எந்தவிதமான பங்கும், சம்பந்தமும் கிடையாது. அவர்களோடு என் ஊழியத்தை

பலர் சம்பந்தப்படுத்திப் பேசுவதை அறியவந்தேன். அப்படிப்பட்ட வீண் அலுவல்காரர்களின் பேச்சை யாரும் நம்பாதீர்கள். சென்னை, பல்லாவரம் பகுதிகளில் சபைகள் நாளுக்கு நாள் உடைந்து, பெருகி வருகிறது. விசுவாசிகள் சிதறிக் குறைந்து வருகின்றனர். இந்தப் பகுதியில் தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தி தாறுமாறாக்கப்பட்டு அந்தப் பகுதி ஒரு பாபேல் போன்றுக் காட்சியளிக்கிறது. இங்கிருந்து தான் என்னைக் குறித்து அனைத்து தவறான செய்திகளும் பற்பல இடங்களுக்கு பரவி வருகிறது. மேற்கூறிய நபர்களோடு என் பெயரைப் பிணைப்பது எனது ஊழியத்தைக் கரைப்படுத்த சாத்தான் உபயோகிக்கும் ஆயுதமாகும். மேற்கூறிய நபர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். நான் அவ்வாறாக ஞானஸ்நானம் பெற்றவர்களோடு ஐக்கியம் கொண்டிருப்பது போல் அவர்களோடும் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான். மற்றபடி ஊழியத்தில் எனக்கும் அவர்களுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை.

86. இவர்கள் இருவரும் அவ்வப்போது அநேக தவறான உபதேசங்களை எழுதிவந்தனர். சகோ.கே.ராஜாவின் தவறான போதனைகளைக் குறித்து அவ்வப்போது சில செய்தித் தொகுப்புகளை நான் எழுதியுள்ளேன். இங்கு சகோ.ஜெ.தேவநேசனின் தவறான உபதேசம் குறித்தும் எழுத ஆவியினால் உணர்த்தப்படுகிறேன். இது அவருடைய **உங்களுக்குள்ளும் கள்ள போதகர்கள் இருப்பார்கள்** என்ற சுற்றறிக்கையில் கூறப்பட்ட சில காரியங்கள் குறித்து ஆகும். இங்கு இவர் தான் மனந்திரும்பாமல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதாகவும் இதனால் பரிசுத்தஆவியை பெறவில்லையென்றும், அதற்காக தனக்கு ஜெபிக்கும்படியும் கேட்டுள்ளார்.

87. முதலாவது வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அது உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோசனம் உள்ளவைகளாயிருக்கிறது என 2தீமோ.3:16,17 வசனங்களில் வாசிக்கிறோம். மேலும் தேவனுடைய ஆவியினாலேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான் எனவும் 1கொரி.2:11ல் வாசிக்கிறோம். இந்த வசனங்களின்படி தேவஆவியைப்பெறாத ஒருவன் எப்படி வேதவாக்கியங்களை அறிந்துகொள்ள முடியும்? சகோ.ஜெ.தேவநேசன் பரிசுத்தஆவியைப் பெறவில்லை, ஆதலால் வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளவில்லை, ஆதலால் தான் எழுதுகிறது இன்னதென்ற அறியாமல் என்னென்னவோ எழுதி தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை தாறுமாறாக்கி தன்மீது ஆக்கினையை வருவித்துக்கொண்டிருக்கிறார்.

88. மேலும் இவர் சர்ப்பத்தின் வித்து வெளிப்பாட்டை சரியாகப்புரிந்துகொள்ளாததினால், ஏவாள் மிருகத்தினால் லேவி.18:23,24ன் படி கற்பழிக்கப்பட்டு, கருவுற்றாள். இதனால் மனிதன் பாதி தேவகுணமும் பாதி மிருககுணமுமாக மாறினான் என்று எழுதி தேவனுடைய வெளிப்பாட்டை தாறுமாறாக்குகிறார். இங்கு பரிசுத்தஆவியானவர் கொடுத்த வெளிப்பாடுக்கும், உலகத்தின் ஆவி கொடுத்த வெளிப்பாடுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்போம்.

89. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களை பார்க்கிலும் (Beast of the field) சர்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. ஆதி.3:1. இந்தக் காட்டு ஜீவன் தேவனால் சபிக்கப்பட்ட பின்புதான் சர்ப்பமாயிற்று ஆதி.3:14. அதாவது மனிதனை போல் நிமிர்ந்து நடந்த இந்தக் காட்டுஜீவன் சபிக்கப்பட்ட பின்பு ஊர்ந்துசெல்லும் பிராணி ஆனது. இந்த ஜீவன் மனிதக்குரங்குக்கும், மனுஷனுக்கும் இடையே உள்ள ஒரு உருவத்தைப் பெற்று, மனுஷனைப் போல் நிமிர்ந்து நடக்கும் ஒரு ஜீவனாயிருந்தது. இதனுடைய உருவமைப்பு மனிதனுடைய உருவமைப்புக்கு மிக்க நெருக்கமாகயிருந்தது. இதனுடைய சுபாவம் மனிதனுடைய சுபாவத்துக்கு மிக்க அருகாமையில் இருந்தது. இது ஏவாளிடம் சம்பாஷிக்கக் கூடியதாகவும் இருந்தது. ஏவாள் இந்த ஜீவனால் வஞ்சிக்கப்பட்டு, அதனால் கற்பழிக்கப்பட்டு, கற்பிணியானாள் என்று நாம் அறிவோம். ஒரு மிருகத்தின் விந்துவினால் ஒரு ஸ்திரீ கருத்தரிக்க முடியாது. இது முற்றிலும் உண்மைதான். ஒரு மிருகத்தின் மரபணுக்கள் (Genes) ஒரு ஸ்திரீயில் செலுத்தப்பட்டால் அது கருத்தரிக்காது. அவர்கள் மீண்டும் மீண்டும் முயன்று பார்த்துவிட்டனர். அது ஸ்திரீயின் முட்டையுடன் சேரமுடியாது. ஆனால் இந்த காட்டு ஜீவனால் மட்டும் அது சாத்தியமாயிற்று. ஏனென்றால் அந்த ஜீவனை கர்த்தர் அவ்வாறாக சிருஷ்டித்தார். தேவனே இந்தக் கருத்தரித்தலை அனுமதித்தார். ஏனென்றால் சாத்தானின் வித்து உலகத்தில் பிரவேசிக்க இது ஒன்றே வழியாக இருந்தது. இது தேவனுடைய திட்டமாயிருந்தது. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. ஆக இந்த மிருகத்தின் மூலமாக சாத்தானின் வித்து ஆதி.3:15, ஸ்திரீயின் வயிற்றில் உருவாக சாத்தியமாயிற்று. காயீன் பொல்லாங்கானால் உண்டானவன் 1யோ.3:12. (Cain was of that wicked one).

90. சாத்தானுக்கு மனிதகுரங்கிற்கும், மனுஷனுக்குமிடையே வேறொரு இரத்தம் இருந்ததையும், அந்த இரத்தம் தான் மனுஷ இரத்தத்துடன் கலக்கும் என்பதையும் அறிந்திருந்தான். ஏனென்றால் ரகசியமானது அவனுக்கு மறைபொருள் இல்லை. எசே.28:3. ஆதலால்தான் சாத்தான் வேறு எந்த காட்டுஜீவனோடும் இடைபடாது, இந்தக் காட்டுஜீவனிடம் மட்டும் இடைபட்டான். இந்தக் காட்டுஜீவன் தான் மனுஷனுக்கும், மனுஷகுரங்கிற்கும் இடையே இருந்ததும், இப்பொழுது இல்லாமற்போனதுமான இணைப்பு.

91. மனுக்குலத்தை பாவத்தில் வீழ்த்த சாத்தானுக்கு அதாவது லூசிபருக்கு ஒரு சரீரம் தேவைப்பட்டது. ஆனால் அந்த சரீரத்தை அவன் சிருஷ்டிக்க முடியாது. ஆதலால் பெரும்பாலும் மனித உருவமைப்புக் கொண்ட இந்தக் காட்டுஜீவன் மூலம் சாத்தான் தன்னுடைய வித்தை மனுக்குலத்துக்குள் பிரவேசிக்கச் செய்தான். மனுஷனைப் பாவத்தில் வீழ்த்தினான். பாவத்தில் வீழ்ந்த மனுஷனை இரட்சிக்க தேவன் தனக்கென்று ஒரு சரீரத்தை சிருஷ்டித்து, மாம்சத்தில் வெளிப்பட்டு, அவன் இனத்தான் மீட்பராகி, அவனை மீட்டுக்கொண்டார்.

92. எனக்கு அருமையான சகோ.ஜெ.தேவநேசன் இந்த சம்பவத்தை லேவி.18:23,24 வசனங்களோடு ஒப்பிட்டு ஆதி பெண் ஏவாள், மிருகத்தோடு பாலுறவுக் கொண்டாள். இந்த தாறுமாறானக் காரியத்தினால் பெண்ணின் மூலம் ஆணுக்குள் மிருகத்தின் இரத்தம் கலந்து நாம் பாதி தேவகுணமும், பாதி மிருகக் குணமுமாக மாறினோம் என எழுதுவது அவர் தேவனுடைய சர்பத்தின் வித்து வெளிப்பாட்டை தாறுமாறாக்குவதாகும். லேவி.18 அதி. பாலியல் குற்றங்களுக்கடுத்தச் சட்டம் (Laws of sexual sins) இங்கு கர்த்தர் மோசேயை நோக்கி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்படியாகக் கொடுத்தக் கட்டளைகளில் ஒன்று; யாதொரு மிருகத்தோடும் நீ புணர்ச்சிசெய்து, அதினாலே உன்னைத் தீட்டுப்படுத்த

வேண்டாம்; ஸ்திரீயானவள் மிருகத்தோடே புணரும்படி அதற்கு முன்பாக நிற்கலாகாது; அது அருவருப்பான தாறுமாறு என்றார். லேவி.18:23. அதாவது ஒரு ஸ்திரீ யாதொரு மிருகத்தோடே சேர்ந்து சயனிக்கக் கூடாது. இதுக்குறித்து மேலும் லேவி.20:15,16, யாத்.22:19, உபா.27:21 வசனங்களில் வாசிக்கலாம். இங்கு ஒரு ஸ்திரீ ஒரு மிருகத்தோடு சயனித்தால், அதனால் அவள் கருத்தரிக்க முடியாது. ஆதலால் ஏவாள் இந்தப் பாவத்துக்கு உட்பட்டாள் என்பதும், இதனால் அவள் கருத்தரித்தாள் என்பதும், நாம் பாதி தேவகுணமும், பாதி மிருககுணமுமாக மாறினோம் என்பதுமான ஞானம் பரத்திலிருந்து இறங்கி வந்த ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கு அடுத்ததுமாயிருக்கிறது. ஏவாளுக்கு அடுத்த காரியங்கள் நாம் மேலே பார்த்தபடி முற்றிலும் வித்தியாசமானது. அந்தக் காட்டு ஜீவனுக்கும், லேவி.18அதி மிருகங்களுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அந்தக் காட்டு ஜீவனால் ஸ்திரீ கருத்தரித்தாள். ஆனால் இந்த மிருகங்களினால் எந்த ஒரு ஸ்திரீயும் கருத்தரிக்கமுடியாது.

93. கானானீயர் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்து வந்தனர். இவர்கள் காயீனின் புத்திரர். காயீன் சர்ப்பத்தின் குமாரன். சர்ப்பம் ஒரு இராட்ஷசமனிதன். பெரிய பயங்கரமான உருவம் படைத்தவன். அவன் ஊரும் பிராணியல்ல. அவன் அழகுள்ளவன். அவன் எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் மிகவும் தந்திரம் உள்ளவன். ஆதலால் இந்தக் கானானீயர் முற்றிலும் வித்தியாசமான ஜாதியார். ஏனென்றால் அவர்கள் சர்ப்பத்தின் வித்து.

94. சகோதரனே, உன்னுடைய பணபலத்தினால் உன் மனம்போல் இக்காலத்துக்குரிய செய்திக்கு, தேவனுடைய வெளிப்பாட்டுக்கு விளக்கம் கொடுத்து உன் மீது தேவஆக்கினையை வருவித்துக் கொள்ளாதே என்று உன்னை எச்சரிக்கிறேன். ஏனென்றால் உன்னை நான் மிக அதிகமாக நேசிக்கிறேன். இது அன்பின் நிமித்தமாக எழுதும் கடிந்துகொள்ளுதல். மற்றும் திருத்தமாகும். கடிந்துகொள்ளுதலை கவனித்து நடக்கிறவனோ கனமடைவான். நீதி.13:18.

95. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும் படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவாராக. ஆமென்.

*ஜுன் & ஜுலை, 2003.*

*கிறிஸ்துவின் அன்பில்,*
*சகோ.காலேப் யோசுவா.*